# தேன் மலர்கள்



சிந்தனை வட்டம்

கலைமகள் ஹிதாயா ரிஸ்வி

# தேன் மலர்கள்

(கவிதைத் தொகுதி)

(இலங்கையில் ஒரு முஸ்லிம் பெண் கவிஞரால் எழுதி வெளியிடப்படும் முதல் மரபுக்கவிதை நூல் )

கவிஞர்

– கலைமகள் ஹிதாயா றிஸ்வி –

வெளியீடு:
சிந்தனை வட்டம்
14, உடத்தலவின்னை, மடிகே
உடத்தலவின்னை – 20802
ஸ்ரீலங்கா
Tel: 0094-8-497246 / 0094-78-680645
Fax: 0094-8-497246
E-mail: chinthanai_vatt@hotmail.com

80/-

# தேன் மலர்கள்

(மரபுக் கவிதைத் தொகுதி)


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | கலைமகள் ஹிதாயா றிஸ்வி<br>677, அஹமட் வீதி<br>சாய்ந்தமருது – 14 (கி.மா)<br>ஸ்ரீலங்கா<br>Tel -067-22134 |
| முதற்பதிப்பு | : | 2000 April |
| பதிப்புரிமை | : | ஆசிரியைக்கே |
| வெளியீடு | : | சிந்தனை வட்டம் |
| அச்சுப்பதிப்பு | : | C.G. M. Express Print Shop<br>127. Madawela Rd, Katugastota.<br>Srilanka.<br>Tel. 0094-8-497399 |
| கணனிபதிவு | : | Miss M.N.Z. Munawwara.<br>Udatalawinna communication<br>14. Udatalawinna, Madige<br>Udatalawinna-20802<br>Srilanka. Tel. 070-800480 |
| புத்தகஅமைப்பு | :– | N.L.S. Salahudeen.<br>(Udatalawinna communication) |

80/=

# சமர்ப்பணம்

பாலா சங்குபிள்ளை
46/5,டன்பார் வீதி,
அட்டன்.
T.P:051-22399,22057,
072-657614,

கரம் பிடித்து மண்ணில் எழுத
கற்றுத் தந்து
கல்வி வித்தினை எந்தன்
கருவில் விதைத்து
முயற்சிக்கனியினை சமூகத்திற்குப்
பிரயோசனம் அளிக்கும் படியாய்
எழுதச் சொன்ன என்னுயிர்
அன்புத் தந்தை

மர்ஹூம்
வைத்தியக்கலாநிதி
யூ. எல். ஏ. மஜீத் (ஜே. பி)
அவர்களுக்கு

இந்நூல்
அன்புக் காணிக்கை

# சிந்தனை வட்டத்தின்
# இலக்கிய நூல்கள்

1. கரு (சிறுகதைத் தொகுதி)

   – புன்னியாமீன்

உ. நெருடல்கள் (சிறுகதைத் தொகுதி )

   – புன்னியாமீன்

3. அந்த நிலை (சிறுகதைத் தொகுதி)

   – புன்னியாமீன்

4. இஸ்லாமிய கதைகள்

   – அல்ஹாஜ் மீரா மொஹிடீன்

5. புதிய மொட்டுகள் (கவிதைத் தொகுப்பு)

   – புன்னியாமீன்

6. அரும்புகள் (கவிதைத் தொகுப்பு)

   – புன்னியாமீன்

7. பாலங்கள் (கவிதைத் தொகுப்பு)

   – புன்னியாமீன்

8. தேன்மலர்கள் (கவிதைத் தொகுப்பு)

   – கலைமகள் ஹிதாயா றிஸ்வி

9. இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை (கவிதைத்தொகுதி)

   – கலைமகள் ஹிதாயா றிஸ்வி

   –மஸீதா புன்னியாமீன்.

# பதிப்புரை

கடந்த இரண்டு தசாப்தங்களாக கல்விசார், அறிவியல் நூல்களை வெளியிட்டு வந்துள்ள எமது ''சிந்தனை வட்டம்'' வாசக நெஞ்சங்களின் அன்பு வேண்டுகோள்களுக்கிணங்க தொடர்ந்து இலக்கிய நூல்களையும் வெளியிடவுள்ளதென்பதைத் தங்களுக்கு அறியத்தருவதில் பெருமிதமடைகின்றோம்.

ஈழத்து இலக்கியவானில் தமிழ்பேசும் பெண் எழுத்தாளர்கள் மிகக் குறைவு. அதிலும் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களோ மிகமிகக் குறைவு. விரல்விட்டு எண்ணக்கூடிய முஸ்லிம் பெண் எழுத்தாளர்களிடையே சோதரி கலைமகள் ஹிதாயா றிஸ்வி குறிப்பிடத்தக்கவர்.

மீன்பாடும் தேனாடாம் கிழக்கிலங்கையில் சாய்ந்தமருது பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சோதரி கலைமகள் ஹிதாயா றிஸ்வி 1980 களில் எழுதத் தொடங்கியவர். கவிதை, சிறுகதை, விமர்சனம் என இலக்கியத்தின் பல வடிவங்களில் தனது சுவட்டினைப் பதித்துள்ளவர். இவரால் எழுதப்பட்ட மரபுக்கவிதைகளுள் 40 கவிதைகளைத் தொகுத்து 'தேன் மலர்கள்' எனும் மகுடத்தில் நூலாக வெளியிடுகின்றோம்.

இலங்கையில் முஸ்லிம் பெண் எழுத்தாளர் ஒருவரின் முதல் மரபுக்கவிதைத் தொகுதி என்ற வகையில் இக்கவிதைத் தொகுதி சிறப்புப்பெறும் அதேநேரத்தில், ''சிந்தனை வட்ட'' வெளியீடுகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவு தரும் வாசக நெஞ்சங்கள் இந்நூலுக்கும் தமது ஆதரவினைத் தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

- சிந்தனை வட்டம் -

14, உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை, 20802
ஸ்ரீலங்கா.
தொலைபேசி :08-497246/ 070-800480/078-680645
தொலைநகல் :0094-8-497246
E-mail :chinthanai_vatt@hotmail.com

# அன்புடன் இவர்கள் ....

♫ கவிஞர் – என். நஜ்முல் ஹுசைன்.

♫ கவியரசு – எம். எச். எம். ஹலீம்தீன்.

♫ கலைநதி – பதியதளாவ பாறூக்.

♫ கவிச்சுடர் – குறிஞ்சி தென்னவன்.

## வழங்கிய ஆசிகள் உள்ளே....


**நூலாசிரியையுடனான தொடர்புகளுக்கு ........**

**KALAIMAGAL HIDAYA RIZVY**
**NO:677, RIZNA NIVAS,**
**AHAMED ROAD,**
**SAINTHAMARUTHU - 14**
**SRILANKA.**
**T/P 067-22134**

## அன்புடன்....

கவிஞர் என். நஜ்முல் ஹுசைன்

ஒரு
பூங்குயில் இங்கே
பூபாளம் இசைக்கிறது.

வாழ்வின் இலக்கணம்
எங்களில்
ஜொலிக்க வேண்டும்
என்பதற்காய்
இலக்கண நகைகளை
தான் அணிந்து கொண்டு

மரபுக் கூட்டுக்குள்
இருந்தாலும்
சுதந்திரப் பறவையாய்
மானிட விடுதலைக்காய்
கீதம் இசைக்கிறது.

காயப் பட்டுப்போன
மனித நேயங்களை
சொஸ்தப் படுத்துவதற்காய்

தலைகளை
கானல் ஆக்கிக் கொள்கின்ற
தங்கள்
மனித ஜீவன்களின்
பரிதாப கதைக்காய்

இது
சகோதரி ஹிதாயாவின்
இதயக் குரல் மட்டுமல்ல
இதயக் குமுறலும் தான்.

இங்கே உள்ளவை
வெறுமனே
புத்தகத்திற்காக கொட்டப்பட்ட
சொற்கள் அல்ல
பலஸ்தீன விடுதலை வீரனாய்
வீசப்பட்ட கற்கள்.

தேயிலைச் செடிகளுக்கிடையே
வெற்றிலையாய் போனோரின்
வேதனை முனங்கலுக்காய்
சப்தமிட்டு கோஷமிடும்
இந்தக்
கூர் முனைப் பேனா
கண்ணீரில்
காவியம் வரையும்.
கன்னியருக்காய்
சுயம்வர
விளம்பரம் செய்திருப்பது
கூன்விழுந்த
முதுகெலும்புகளை நிமிர்த்
துவதற்காய்

தந்தையை நினைத்து
உருகும் போது
ஈரம்
தாய்நாட்டின்
எழுச்சிக்காய் பாடும்போது
வீரம்.

இவளைத்
தழுவிய தென்றலும்

தாக்கிய சூறாவளியுமே
கவிதை படைக்க
கருப் பொருள் தந்துள்ள
காரணத்தால்
இவளது
எழுத்துக்கள் உருவாக்குவது
வெறும் வர்ணனைகளை அல்ல
ஒரு வரலாற்றை.

இந்தப் பெண்ணிடம்
இவளின் (பெண்) "Pen"
வளைத்துக் கொடுத்துள்ளதின்
எடுத்துக் காட்டுகள்
இந்தத் தேன் மலர்களின்
பண்.

இது
மனித உணர்வு
நூலினால்
நெய்யப்பட்ட
கவிதைச் சோலை
தாயைப் போல
பிள்ளையாய்

எழுத்துக்கள் ஒவ்வொன்றும்
முத்துக்களாய்
இந்தக் கவி உள்ளத்தினை
மின்னலிட்டுக்காட்டுகின்றன.

அந்த வெளிச்சத்தில்
இந்தப் பெண் கவிஞர்
ஏறி நிற்கும் "படிக்கட்டு"
நன்கு தெரிகிறது.

ஆங்காங்கே
தான் சிந்திய மலர்களை
"தேன்மலர்கள்" என
தொகுத்த
பாராட்டிற்குரிய
இவள் துணிவு
நாளையும் நிலைக்கும்.
நம்பிக்கைக்குரிய
இவள் எழுத்து.

இலக்கிய நிலத்திலே
இந்தச் சோதரி
ஹிதாயா றிஸ்வி தூவும்
(க) விதை
இவளின்
புகழ் பரப்பும் அறுவடைகளைப்
பெற்றுத் தருவதற்காய்
இதயங்கனிந்து
வாழ்த்துகிறேன்.

கவிஞர்
என். நஜ்முல் ஹுசைன்
இல 823, பீர்சாஹிபுவீதி,
கொழும்பு - 12

# விடிவு தரும் ....

கவியரசு எம். எச். எம். ஹலீம்தீன்

இன்றெங்கள் சமூகத்தில்
அறிவாற்றல் மிகுந்து வரும்
பெண்மணிகள் இருந்தாலும்
பயனில்லை - ஒரு சிலரே
உன்னதமாம் எழுத்து பணி
ஆற்றுவதில் முனைந் துள்ளார்
அன்னவருள் கலை மகள்
ஹிதாயா ரிஸ்வியும் ஒருவராம்!

சாய்ந்த சருகு போலன்றிக்
காலமெலாம் சுடர்கின்ற
ஆய்விலக்கியக் களமாகும்.
கிழக்கிலங்கையைச் சேர் புகழ்
சாய்ந்தமருது எனும் பதியில்
சால்பு நிறை வைத்தியராம்
நேயமிகு அப்துல் மஜித் ஜே.பி
நன் மகள் தான் ஹிதாயாவும்.

எத்தனையோ தொல்லைகள்
இன்னல்கள் - இடுக்கண்கள்
மத்தியிலே இள வயது
மங்கையிவர் எழுது கோலை
சத்தியத்தின் திறவு கோலால்
சாதுரியமாய் ஏந்தி நிதம்
புத்தம் புது கருத்துக்களை
படைப்பதுவும் புதுமையே!

சன்மார்க்க நெறிகளையே
சலமாக்கும் - இழிவாக்கும்
பெண்களை மட்டு மில்லை
ஆண்களையும் சாடுவதில்
என்றென்றும் தயங்காத
ஒரு மௌலவி யாவுமிவர்
என்பதனை எழுத்துலகில்
அறியாதோர் பலருண்டே

புது வழியும் வேண்டும் தான்,
பொதுவாயெல்லாம் வேண்டும் தான்
எதுவானாலும் அதி லென்ன
ஏற்றம் தரும் அரிய வழிதான்
அதுவே! ஆமாம்! மரபு வழி
எனுமுணர்வில் சோதரி ஹிதாயா றிஸ்வி
மதுரமான கவிதைகளை
மரபு வழியில் தருகின்றார்.!

தொலைவில் இவரிருந்தாலும்
தூய எழுத்தின் பெயராலே
மலையகத்து மக்கள் தம்
மேலான கலையிலக்கிய
பொலிவுக்கு மென் மேலும்
புத்துணர்வு ஊட்டுவதில்
நிலையாகும் உறுதியுடன்
நற் பணியும் ஆற்றுகின்றார்!

அடாது செய்வோர் கனைதனையும்
அற்பமாய்க் கனிந்தாலும்
"தடாகம்" எனும் சஞ்சிகையைத்
தைரியமாய் நடத்து மிவரின்
விடா முயற்சியைப் போற்றுவோம்!
விடிவு தரும் எழுத்தொரு நாள்
படாத பாடு பட்டாலும்
பயன் நல்கும் எழுத்தாற்றல்.

பிரசங்கம் கவியரங்கம்
போட்டிகள் அனைத்திலுமே
சிறப்பாக பங்கேற்றிச்
சீராற்றல் தனைக் காட்டி
பரிசில்கள் பெற்று வரும்
பாவை கலைமகள் ஹிதாயா றிஸ்வியின்
அரிய பணி - எழுத்துப் பணி
இன்னுமோங்க வாழ்த்திடுவோம்!

அருங் கவிதை மட்டுமில்லை
அன்றாட வாழ்க்கையிலே
பெரும் புயலாய் வீசுகின்ற
பிரச்சினைகள் அவலங்கள்
கருப் பொருளாய் கொண்ட சிறு
கதைகளுடன், கட்டுரைகள்
உருவாக்கும் எம் கலைமகள்
ஹிதாயா றிஸ்வியை வாழ்த்திடுவோம்!

கூன் விழுந்த கருத்துக்களைக்
கோலமிட்டுக் காட்டாமல்
மேன்மையுறும் எண்ணக் குமுறல்களை
மேலான கவி ஆற்றல் மூலம்
"தேன்மலர்கள்" எனும் பெயரில்
தீந்த் தமிழில் தந்துள்ளார்.
ஈண்டிதனை நாம் சுவைத்தே
ஊக்க மிவர்க்கு நல்கிடுவோம்!

இள நங்கை ஒருத்தியின்
இதயராக சுருதியிலே
ஒளிக்கின்ற இத்தகைய
உன்னத கருத்துக்கள்
வளமான எண்ணங்கள்
வருங்கால சமுதாயம்
குளிர் காயும் நிச்சயமாய்
கை கொடுக்கும் ஐயமில்லை!

இனிக்கின்ற பணியாகும்
எழுத்துப் பணியை யென்றும்
தனித்துவத்தை காத்து மேலும்.
தொடர்கின்ற பணியாக
அணி செய்ய ஹிதாயா றிஸ்விக்கு
அல்லாஹ்வின் அருளன்பு
கனிந்தின்னும் எழுத்தாற்றல்
கவின் பெறவே வாழ்த்திடுவோம்!

கல்ஹின்னை
கவியரசு
எம். எச். எம். ஹலீம்தீன்

## வாழ்த்துவது .....

– கவிஞர் பதியதளாவ கே. எம். பாறூக்

கவிஞன்
கதை சொல்பனல்ல
கற்பனைத் தீயை
கலங்கரை விளக்கமாக்கி
சமுதாய இருட்டுக்கு
வெளிச்சமிடுபவன்.

மானுட உறவுக்குள்
மறு பிறப்பெடுக்கும்
ஊத்தைகள்
கவிதைக் கரங்களால்
சலவை செய்யப்படுகிற
-தென்றால்

கவிதை
மரணிக்கவில்லை என்பது
அர்த்தம்.

சகோதரி ஹிதாயா றிஸ்வி
இலக்கிய உலகில்
நிறுத்திக் கொண்ட
ஆளுமைப் பங்கை
இங்கே
நாற்பது கவிதைகளின் மூலம்
முகங்காட்டி இருக்கிறாள்.
பிரசவத்தை
பிரசுரத்தின் மூலம்
செய்து காட்டியிருப்பது
இலக்கியத் துறையில்
அவள்
இறுகிக் கொண்ட இணைப்பை
இனங்காட்டி வைக்கிறது.

வாழ்வுச் சுவட்டை
அநுசரித்துப் போன
சகோதரி ஹிதாயாவின்
அர்த்தமுள்ள
சிந்தனைக் கரங்கள்
அமாவாசைக் கருப்புக்கு
நிலவுகளை அழைத்து வந்து
நிறுத்தி இருக்கிறது.

தேன் மலரின்
மெல்லிய வார்த்தைகளினால்
வாசகர்களுக்கு
தீனி போட்டிருப்பது
பாண்டித்தியத்தை
விவாகரத்துச் செய்துவிட்டு
படிக்கின்ற உள்ளங்களை
இலக்கியப் பந்தலுக்குள் வைத்து
பழகு தமிழ்
தாலிகட்டியிருக்கிறது!

இலக்கிய வயலில்
அறுவடை செய்த
கலைமகளின்
கவிதைக் கனிகள்
ஒரு
நலிந்த சமூகத்தின்
அவலப் பசிக்கு
சோறு போடுமென்பது
என் கணிப்பு

பாரதி கண்ட
புதுமைப் பெண்ணின்
நெஞ்சுறுதிச் சாயல்கள்
கவிதைத் தொழிலில்
புலப்படும் போது
இந்தச் சோதரியாளும்
கலையுலகின் காவலனாய்
கணிக்கப்படுகிறாள்.

பாவை இவளின்
பா -தொகுதி
முதன் முதலில்
முஸ்லிம் பெண் வரிசையில்
இலக்கிய வரலாற்றில்
ஈழத்திற்கொரு
பெருமைக் கோடு!

கவிதைக்காக
கலைமகள்
எழுதுகோலை நிறுத்தியிருப்பது
சமுதாய ஏட்டில்
ஒரு
பற்றுக் கோட்டை
வரைந்து காட்டப்
பாடுபட்டிருக்கிறாள்
என்பது புலனாகின்றது!

இறுதியாக
கருப்புச் சுவரின்
வெள்ளைச் சித்திரங்களாக
இலக்கியப்பரப்பில்
இவளின்
கலை வடிவங்கள்
ஆளுமை பெற்று
வாழ்ந்து வழிகாட்ட
பிரிய வாழ்த்துக்கள்...

(கலைநதி)
கவிஞர்
பதியதளாவ கே. எம். பாறூக்
பிரதான வீதி
பதியதளாவ.

# பூத்துச் சிரிக்கட்டும்.....

**கவிச்சுடர் குறிஞ்சித் தென்னவன்**

நாற்பது மலர்கள் பூத்து
முறுவலை அள்ளி வீசும்
அற்புதம், கவிதை மலர்
அகவிதழ் தோறும் மணம்
கற்பூர மாய் மணக்கு ம்
கனித்தமிழ் இனிமைத் தேனோ
சொற்பொருள் நயத்தி லூறி
சுவைதரும் தேன் மலர்கள்!

கலைநிறை யுளத்தில் ஊறும்
கவிதையாம் உணர்வுக் கையால்
மலைகளை அணைத்து, ஆங்கு
வாழ்பவர் இதயந் தொட்டு-தே
யிலைச் செடி யிடையில் பெண்கள்
இதயத்தின் குரலாய் ஓங்கி
ஒலித்திடும் கவி மலர்கள்
இன்சுவைத் தேன் மலர்கள்!

கற்பனை வளமும் கருத்து வளமும்
சொற்களில் எளிமை தோயும் அழகும்
பற்பல நூல்கள் பயின்ற புலமையும்
பொற்புறத் திகழ்ந்து பொலிவுறும் மலர்கள்
மார்க்கப் பார்வையும் தெளிந்த சிந் தனையும்
வாய்க்கப் பெற்றவர் வளர்கலை மகளிவர்
கோர்த்து வழங்கும் கோதில் மலர்கள்

பதுமை வாழ்க்கையா ? பாவையர் வாழ்வென
இதயம் கனன்று எழுந்திடும் கவிதைகள்
நதியின் வேகமாம், நவயுகக் கவிஞனின்
புதுமைப் பெண்குரல் பொங்கும் தேன் மலர்.

இளமைத் தமிழில் இனிமை யூற
எழுதும் ஹிதாயா இதயக்கா
மலர்ந்த செந்தேன் மலர்கள் இணைந்த
மாலை இதுவாம் வையத்துள்
புலர்ந்த காலைப் பொழுதாய், உளத்தில்
புலரும் அறிவுச் சுடராக
தெளிந்த ஞானத் தமிழில் கவிதை
தினமும் பூத்துச் சிரிக்கட்டும்.

மறைந்த கவிஞர்
கவிச்சுடர் குறிஞ்சி தென்னவன்
(வி. எஸ். வேலு)
லபுக்கெல்லை மேற்பிரிவு
லபுக்கெல்லை.

கிழக்கிலங்கை தந்த சிறந்த பேச்சாளரும், நாடறிந்த கவிஞரும், எழுத்தாளரும் "நபிகள் பெருமானர் (ஸல்) என்ற கவிதை நூலின் ஆசிரியரும, கல்முனை சாஹிராக் கல்லூரியின் இரண்டாம் தர அதிபருமான

கலாபூஷணம் ஏ. யூ. எம். ஏ. கரீம் அவர்களின்

# அணிந்துரை

மீன் பாடும் தேன் நாடு கிழக்கிலங்கை
கலைகளின் பிறப்பிடம், கவிகளின் இருப்பிடம்,
கலைமகளும், அலைமகளும் காவியம் துய்த்திடும்
கவின் சோலை. அவ்வண்ணச் சோலையில் பூத்து
மணம் பரப்பும் மலர்கள் ஏராளம்! ஹிதாயா
றிஸ்வியின் "தேன்மலர்கள்" இன்று ஒரு கன்னி வெளியீடு.

உள்ளத்துறைத்து, நெஞ்சில் ஊற்றெடுக்கும்
கவிதை, தெள்ளத் தெளிந்த தமிழில் வெள்ளமென
வெளிவரும், மீனாட்சி சுந்தரனார் கூற்றுப்போல்,
வெறும் மாதுளம் பழக் கவிதைகளாக இல்லாமல்,
மாதுளையை உடைத்து ஒவ்வொரு தோலாக
நீக்க மணிகள் வெளிவருதல் போல கவிதைகளில்
பொருளாழம் தெரிதல் வேண்டும்.

"சான்றோர் கவியெனக் கிடந்த
கோதாவரியினை வீரர் கண்டார்" என்கிறான்
கவிச்சக்கரவர்த்தி கம்பன் ,மேற்பார்வையில்
ஆழம் தெரியாமலும், உண்மையில் மிக்க
ஆழமானதுமான நதியை, சான்றோர் கவிக்கு
உவமை கூறினார்.

கணக்கில் குறித்த இடத்தில் இலக்கம் பிசகாமல்
இணைக்கப்படுத்தல். அதைப்போல, இசைத்துத்
தெளிவாக மினுக்கி, வகிர்த்து, உணர்ச்சிப்
பெருக்கில் நனைந்து பி.....ழி.....ந்து கவியாகும்.

"பெருகிய உணர்வின் இறுகிய சிறைப் பிடிப்பே கவிதை

"உள்ளத்துள்ளது கவிதை, நெஞ்சில் ஊற்றெடுப்பது கவிதை, தெள்ளத் தெளிந்த தமிழில் நன்றாய்ச் செப்பிடல் கவிதை" "சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற்புதிது, சோதிமிக்க நவகவிதை" எனப்பலவாறு கூறப்படும்.

மரபு வழி இலக்கியம் படைத்தல் என்றும், மரபும், இலக்கணமும் கவிஞனைக் கட்டுப் படுத்தா தென்றும் கருத்துக்கள் உள்ளன. எனினும் ஒரு மொழிக்குள்ள கவிமரபே அதன் தனித்துவம். அதனை விடின் கவிதையின் கவர்ச்சிகுன்றும்.

கவிதைக்குத் தனி வடிவம் உண்டு. அதன் உருவம் ஓசையில் (Rythm) அமையும். ஒவ்வொரு பாட்டிற்கும் தனித்தனி ஓசை அமைதி உண்டு. பாட்டுப் பாடத் தெரிந்தோர் யாவரும் கவிஞர்கள் இல்லை. ஆனால் கவிஞர்கள் பாட்டுப் பாடத் தெரிந்தவரே.

கவிதை அதன் பொருட் சிறப்பால் உயர்வு பெறும். அதனைச் சொல்லும் பாணியும் அழகாயிருத்தல் வேண்டும். பழம் பாடல்களும் ஓசைகளை அறிவுறுத்தும். ஒரு மாத்திரை தப்பின் ஓசை கெடும்.

கவிதையில் யாப்பிலக்கணங்கள், எதுகை, மோனை, அழகு அமைந்துள்ள சிறப்பை உணர்ந்து இன்புறலாம். ராகலட்சணம் தெரிந்தவர் சங்கீதத்தை அனுபவிப்பது போல், சிறந்த கருத்தும் வடிவமும் பெற்ற பின்னரே அனுபவிக்க முடியும்.

அவ்வடிவம் "கலை" எனப்படும். கவிதையும் ஒரு கலை. தன்னைப் படைத்தவன் (கவிஞன்) தன்னுள் பொதிந்த உணர்ச்சிகளை மற்றவருக்கு

பாலா சங்குப்பிள்ளை
46/5, டன்பார் வீதி,
அட்டன்.
T.P:051-22399,22057,
072-657614,

வழங்குதலே அதன் தொழில்.

சொற்கள் எங்கு தமக்கே உரிய பொருட்
செறிவு, எண்ணத்தைத் தோற்றுவிக்கும் சக்தி கொண்
டுள்ளனவோ, அங்கே கவிதைகளைக் காணலாம்
என்பர்.

இவ்வாறான அழகுத் தோற்றங்களை இப்
பெண்ணின் கன்னி முயற்சியில் செறிவாகக் கானலாம்.
விரிவஞ்சி உதாரணத்திற்குச் சிலவற்றைக் காணலாம்.

குளிர்ந்த மலைகள் சிவப்பேறும்...

உதிரம் தன்னை தேயிலைக்கே-நல்ல
உரமாய் இட்டு வளர்த்தனராம்.
மதுரமான தேனீரும் -அந்த
மாண்பினைக் கூறிச் சிவந்ததுவாம்.

நல்லோர்க்கே சொர்க்கம்.

பெண்ணே வாழ்வின் கண்ணாகும் -அவள்
பெருமையின் அளவோ விண்ணாகும்.
இன்னல் தன்னை அவர்க் கூட்டல் -உயர்
இஸ்லாத்திற்கு முரணாகும்.

நாங்கள்

இத்தரையில் எமைப்போன்ற மாந்தர் தம்மை
ஏன் படைத்தான் இறையவனும்? உயிரைத்தந்து
நித்தமுமே துயரத்தில் ஆழ்த்தி விட்டு
நித்திரையா செய்கின்றான் நம்மை விட்டு!

நித்திரையோ செய்யவில்லை நிமலன் விட்டு
நெறியில்லா மாந்தர்கள் புரியும் சதியில்
இத்தரையில் கிடந்து நாம் உலவல் எல்லாம்
இனியுந்தான் மாறிடவே வழிகள் காண்போம்.

கல்வித் தாய் அருள வேண்டும்..

ஏற்றமுடன் நான் செய்யும் பணியை சிலவோர்
இயலாமையால் இகழும் நிலையைக்கண்டேன்.
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து யானும்
தூயபணி புரிந்திடவும் சுடரைத்தாவேன்.

ஒரு ஒற்றைக் குயிலின் ஓலம்.

சோலையிலே ஒரு ஒற்றைக் குயில்
சோகக் குரலிலே கூவுதடி
மாலையிலும் அதிகாலையிலும் அது
வாடி மனம் வெந்து கூவுதடி.

விளையாட்டுக் கலை வளர்ப்போம், அன்னை, கேவலம் வேண்டாம், தாய்த் தமிழே வாழி... இப்படி பல கவிதைகள் சிறப்புற்று விளங்கி இழையோடுகின்றன.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று
பாரதி கூறியதற்கமைய, மற்றவரும் போற்றும்
வண்ணம் "கலைமகள் ஹிதாயா றிஸ்வி" இன்னும்
பல கவிதை வடிவங்களைப் படைக்க
வேண்டும். இப்பெண்ணின் முயற்சிக்கு
தமிழ் கூறும் நல்லுலகம் நல்லாதரவு தர
வேண்டி வாழ்த்துகின்றேன்.

மேலும் பல செல்வங்களுடன்
கவிதைச் செல்வங்களையும், அதிகம், அதிகம்
பெற்று தமிழன்னைக்கு ஈதல் வேண்டும்.
நீண்ட வாழ்வும், நிறைசுகமும்
"கலைமகள் ஹிதாயா றிஸ்வி" பெற்றின்புற
அருட் பெருங் கடலான அல்லாஹ்வைப்
பிரார்த்திக்கின்றேன்.

ஏ. யூ. எம். ஏ. கரீம்
"வில்லா பறகத்"
சாய்ந்த மருது 03
கல்முனை (கி.மா)

கல்முனை உதவி அரசாங்க அதிபரும், பிரபல எழுத்தாளருமான
நற்பிட்டிமுனை பளீல் B.A (Cey) S.L.A.S.அவர்கள்
அன்புடன் அளித்த

## மதிப்புரை

மக்களுடன் அனேகம், அனேகமாகப் பழகும் வாய்ப்பு எனக்கேற்பட்டுள்ளது. உயிரைக் கொடுத்து 24 மணித்தியாலங்களுக்கு அப்பால் நின்றுபணி செய்தாலும் சிலரைத் திருப்திப் படுத்தவே முடியாத வாய்ப்பு. நல்ல பண்புள்ள மக்களும் இருக்கிறார்கள். விசம் கொண்டவர்களும் வருகிறார்கள். எப்படியானவர்களென இனங்கான முடியாதோரும் வருகிறார்கள். அவர்களில் ஒருவர் என நிமிர்ந்தேன். ஆனால் நின்றதோ சகோதரி கலைமகள் ஹிதாயா றிஸ்வி.

கையிலிருந்த கவிதைகளை வாங்கிக் கொண்ட பின்னர் இரவு பூராக யோசித்தேன். மதிப்புரை எழுதுவதைப்பற்றி, மறுநாள் பயணம் போகும்போது யோசித்தேன். நாளாந்தம் சொரியும் வேலைப்பளுக்களின் மத்தியில் யோசித்தேன் சரியாக ஒரு மாதமாகிய பின்னரும் இந்த யோசனை நீண்டது. இன்று எப்படியாவது எழுதி ஒப்படைத்து விடவேண்டும் என்ற சிந்தனை.

ஆக்கங்கள் படைப்பதைவிட, ஒரு நூலின் முற்பக்கத்துக்கு மதிப்புரை எழுதுவதென்பது அபாயமானது, ஆக்கினையானது. இலக்கிய அறிஞர்கள் போர் தொடுத்துக் கொள்ளும் களம் முன்னுரை. இதில் இக்களத்தைப் பாவித்து ஒரு சில உண்மைகளையாவது பதிவாக்குதல் நல்லது எனச் சிந்தித்தேன்.

அதனால் இங்கு என்னுடைய கருத்துக்களும், ஹிதாயாவின் கவிதைகளும் மாத்திரம் சேராமல், கல்முனைப் பிரதேச இலக்கிய நாகரிகத்தின் ஒரு காலகட்டத்தின் சிறிய பகுதியும் புகுந்துவிட்டது.

கல்முனைப் பிரதேச இலக்கியச் சமாச்சாரங்கள் செழுமைகள் நினைக்க, நினைக்க நெகிழ்வு தரக்கூடியன. நிலத்திலும் கவி: நீரிலும் கவி: பேப்பருடன் தலைகுனிந்து இருந்து விட்டு தலை நிமிர்ந்தால் கவி! இதனால் இப்பகுதியிலிருந்து அநேகமான நூல்கள் வெளிவந்துள்ளன. அநேக சஞ்சிகைகள் வந்த வண்ணமுள்ளன. அனேக இலக்கியக் கழகங்கள் இயங்குகின்றன. எண்ணிலடக்க முடியாத மூத்த நடுத்தர, இளைய (வயதின்படி) எழுத்தாளர்கள் எழுதிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த அற்புத வளத்தை சில மூத்த எழுத்தாளர்கள் கூசாமல் கொச்சைப் படுத்தினர். சிலரின் கொட்டத்தைச் சகிக்க முடியவில்லை. இத்தகைய பண்பில் மிளிர்ந்தவர்களைப் பெயர் சொல்லிக் குறிப்பிட வேண்டியது மிக அவசியம். எனினும் இவர்களை இதற்கேற்ப வரிசைப் படுத்திக்காட்டுவதற்கும். அதற்கான ஆதாரங்களை ஒழுங்கு முறைப்படி குறிப்பிடுவதற்கும் கால அவகாசம் தேவைப்படுகின்றது. இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இக்கடமையை எவ்வாறாயினும் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

1980 களின் ஆரம்ப காலத்தில் இவர்கள் எம்மை ஒலிம்பிக் போட்டிகளில் தமது Rewardஐ உடைக்கவரும் புதிய வீரர்களைக் கொச்சைப் படுத்திப் பார்ப்பது போல நோக்கினர். நன்கு சிரித்தார்கள். உள்ளே நகைத்தபடி கைகுலுக்கினர்.

பின்னால் காலைவாரியபடி ஆரத்தழுவினர். மனதை
எங்கோ தூரவைத்துக் கொண்டபடி இந்தச் சிரிப்புகளும்,
கைகுலுக்குதல்களும். ஆரத்தழுவல்களும்
இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன.

இலக்கியக் கூட்டங்களுக்குச் சம்மதம்
தெரிவித்து விட்டு, அழைப்பிதழில் தமது பெயர்
மேலிடம் பெறாவிட்டால் கூட்டத்தையே பகிஷ்
கரிக்கும் பழக்கம்வரை இவர்களிடம் காணக்
கூடியதாய் இருந்தது. விழா வைக்க வேண்டிய
ஒருவருக்கு விழாவெடுக்க முயற்சிகள் செய்யும்போது
தமக்கும் இப்படியொரு விழாவை வைப்பது
நல்லதென கோரிக்கைகளும் விட்டனர்.

சினிமாத் துறையில் கமலஹாசன, ரஜனிகாந்த்
ஆகியோரின் வரவால் த்ளம்பல் ஏற்பட்ட
எம். ஜி. ஆர். சிவாஜிகளைப் போலவும், பாலசந்தர்,
பாலுமகேந்திரா, பாரதிராஜா போன்றோரின்
வருகையால் அடுக்கடுக்காக எம். ஜி. ஆரின்
படங்களை எடுத்துக் கொண்டிருந்த டைரக்டர்
ப. நீலகண்டனின் நிலையில் மாற்றம் ஏற்பட்டதைப்
போலவும் இது ஒரு நிலை என்பதை இவர்கள்
ஏற்க மறுத்தனர்.

புகழை முன்வைத்தல் என்பது இவர்களிடம்
முக்கியமாக திகழ்ந்தது. இதற்கு அவர்களின் வயதையும்,
முகச் செல்வாக்கையும் சிறந்த
ஆயுதங்களாகப் பாவித்தனர்.
அரசியலிலும்.... பொய்மையிலும்....
புகழிலும்..... etc இலும் தனித்தனியாகவும்,
கோஷ்டியாகவும் கரைந்தார்கள். இலக்கிய
நாகரிகம் பலசந்தர்ப்பங்களில் பேணப்பட வேண்டும்.
என்ற பிரார்த்தனை சிறிய இலக்கியக் குழுக்களால்
இடைவிடாது செய்யப்பட்ட போதும்

பிரார்த்தனைக்கு அடங்குதல் அவர்களுக்குப் பெரிய
சங்கடமாக இருந்தது.
இப்படியான இலக்கியப் பிசகுகள்
தங்கு தடையின்றி நிகழ்ந்த வேளையில் தடாகம்
சஞ்சிகை மூலம் ஹிதாயாவின் அறிமுகம்
எனக்குக் கிடைத்தது.

இக்கால கட்டத்தில் கவிதைகள் எழுதி வந்த
பெண் எழுத்தாளர்களில் கலைமகள் ஹிதாயா,
மாபொல மெஹரூன் நிஸா ரிஸாட், தம்பிலுவில் ஜெகா,
சம்மாந்துறை மஸூறா, ஏ. மஜீத்,
கல்முனை சுல்பிகா செரீப், பாலையூற்று அஸ்ரபா நூர்தீன்
போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
சகோதரி ஹிதாயாவின் தேன்மலர்கள் கவிதைத் தொகுதி
வெளிவருவதைப் போல இவர்களின்
ஆக்கங்களைக் கொண்ட கவிதைத் தொகுதிகளும்
வெளிவருதல் அவசியமாகும்.

ஹிதாயாவின் கவிதைகளிலே தேவையான
தேடல்களில் பெரும்பாலானவை உள் அடங்கி
இருக்கின்றன. அது எழுத்தைத் தொழிலாகக்
கொண்டதால் அல்லாமல், வாழ்க்கையை நன்கு
அனுபவித்துப் பார்த்ததாலே ஆகும். சில
கவிதைகளில் அழகுணர்ச்சி, சலனங்களின் ஊற்றாகப்
பிரவாகித்துள்ளது. சில கவிதைகள் உணர்வுகளின்
உண்மை ஒளியில் கலந்துள்ளன.

ஒரு கவிதை எதனால் உயர்வு பெறுகிறது
என்று குறிப்பிட்டுச் சொல்வது கடினம். காற்றுவீசும்போது
காற்றில் கலந்து வரும் மிக மெல்லிய
நறுமணத்தைக் கூட உணர்ந்து பாராட்டக்கூடிய
வல்லவர்களும் எம்மத்தியில் இருக்கிறார்கள்.
இந்த உணர்வுடன், கவிதையொன்றின் மூலம்
வாசகன் ஏதாவது ஒரு மன உணர்ச்சியைப்

பெறக் கூடியதாய் இருக்கும் போது அது கவிதையாகப்
பிரவாகித்து விடுகின்றது.
எழுத்தை லாவகமாகக் கையாள்வதென்பது
பெரிய பண்பாடு. அது மாபெரிய கடமை.
அத்தகைய எழுத்துப்பணி பரம சுகமானது. இந்தச்
சுகத்தை சாதாரணமானவர்களால் தேடிப்பிடித்து
அனுபவிப்பது மிகவும் கடினம். அவர்கள் இந்த
நிலைக்கு வருவதற்கு மிக அதிகளவில்
பயிற்சியும், அனுபவமும் தேவை.

தந்தைக்கு நிகர் எப்போதும் தந்தை தான்.
அவர் ஒரு இயலாவாளியான வெறும்
கட்டையாக இருந்தாலும் சரியே. அதனால்
சில குடும்பங்களில் தந்தையானவர், தாயை விட
முன்னுரிமை பெற்றுவருகிறார். இத்தொகுதியிலும்
அப்படியே. முதலாவது கவிதை தந்தைக்குரியது.
அடுத்த கவிதை தாய்க்குரியது.
இவரது (ஹிதாயாவின் தந்தை)
தேசமறிந்த ஒரு மருத்துவர். இவர் மரணித்த
போது எழுதிய கவிதையில் மருத்துவத்தின்
உவமை நன்கு கையாளப்பட்டுள்ளது.

"மருத்துவத்தால் பல்லாயிரம்
மக்களது நோய் தீர்த்த
அருந்தந்தை உம் பிரிவால்
ஆறாகு மெம் வேதனைக்கு
அரும ருந்து இனி நாங்கள்
ஆரிடம் தான் பெற்றிடலாம்!"

இங்கு கடைவரியில்
வரும் ஆரிடம் தான் என்பதில் (யாரிடம்
தான்) நாட்டார் பாடல் தன்மையும், பேச்சு
வழக்கும் கலந்து நிற்கிறது.

யாவரும் கேளீர் என்னும் மற்றுமொரு
கவிதையிலும் கவிதையின் கட்டமைப்பை நன்கு
காண முடிகிறது.

உலகில் வாழும் மனிதர்க் கெல்லாம்
ஓடும் குருதி ஒன்றே
கலகம் பண்ணிக் கடிந்து வாழ்தல்
காட்டு விலங்கின் இழி நிலையே

உலக சமாதானமும் இளைஞனும், ஓரணி சேர்வோம்,
கேவலம் வேண்டாம், புனிதத்திங்கள்,
முடிவினி மரணம், எழுவோம் இளைஞர்காள்
என பல கவிதைகளில் கவிதைக்குரிய
ஓசை குறிப்பிடத்தக்களவில் பொதிந்து
கிடக்கின்றன. தன்னுள் பதிந்த உணர்வுகளை
மிக இலகுவாக வாசகர்களுக்கு ஹிதாயா
பகிர்ந்து விடுகிறார்.


இதற்காக ஹிதாயாவை மெச்சினாலும், இதற்காகவே ஹிதாயாவுக்கு
இலக்கிய வரிசையில் முதலிடம்
அளியுங்கள் என்று சிபாரிசு செய்வது முழுப்
பூச்சாகவே அமையும்.
ஹிதாயா தனது கவிதைத்
துறையில் ஓர் தனிப்பட்ட முயற்சியை
பாராட்டத் தக்கவகையில் மேற்கொண்டுள்ளார் என்பதே உண்மை.

ஈழத்தின் பெண் எழுத்தாளர்
என்ற வரிசையில் ,அதுவும் முஸ்லிம் எழுத்தாளர்
என்ற வகையில் உரிய இடம் அளிக்கப்படுதல்
அவசியம். இதில் எவரும் பின்னிற்க
முடியாது. முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின்
கௌரவம் பேணப்படல் வேண்டும் என்பதை நாம் அறிவோம்.
ஹிதாயாவின் எழுத்துப் பணி
தொடர மன நிறைவோடு இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சிந்தனை வட்டத்தின்
அடுத்த வெளியீடு....

புதிய சிந்தனை,
புதிய முயற்சி,
புதிய உத்வேகம்,
புதிய பரிணாமம்,

ஆம்



கிழக்கிலங்கையில் பிறந்த
**கலைமகள் ஹிதாயா ரிஸ்வி**
தென்னிலங்கையில் பிறந்த
**மஸீதா புன்னியாமீன்**

இணைந்து எழுதும

# இரட்டைத் தாயின்
# ஒற்றைக் குழந்தை
(கவிதைத் தொகுதி)

இதனைப் பிரசவிக்கின்றது
மத்திய இலங்கையில் செயற்படும்

## சிந்தனை வட்டம்

தொடர்புகளுக்கு
CHINTANAIVATTAM
14. Udatalawinna. Madige- udatalawinna,20802
T/p: 070- 800480/ 078-680645
Fax: 08-497246
E mail: chinthanai.vatt@hotmail.com

# மனம் திறந்து....

பணத்தை எல்லோரும் மண்ணில் இருந்து தேடலாம். ஆனால் கற்பனையில் உருவாகும் யதார்த்தங்களை எல்லோராலும் தேடமுடியாதே!

மகத்தான மாற்றங்களை உருவாக்கும் வல்லமை பெற்றவைகளே
இந்த இரத்த புஷ்டியுள்ள ஆக்கங்களாகும். வானைப் பார்த்து "உருவாகும்" கற்பனைகளை விட
மண்ணில் இருந்து "உருவாகும்" யதார்த்தங்களும்
சிறப்பானவைகளேயாகும்.

"கவிஞன் பிறக்கின்றான்! அவன் செய்யப்படுபவன் அல்ல! என்பது போல!
கவிதைகளும் "செய்யப்படுபவை" அல்ல!ஆனால் கவிஞன் பிறந்து வளர்கின்றான்!
கவிதைகளோ வளர்ந்த பின்பே பிறக்கின்றன.

அப்படியான கவிதைகளே காலங்கடந்துவாழக்கூடிய சிரஞ்சீவித்துவ வரத்தைப் பெறுகின்றன.
இலக்கியப் பரப்பில், கவிதைகளுக்குரிய நிலை உன்னதமானது. அவை
வெறும் சொல்லடுக்குகளாகவோ, சோடனை வரிகளாகவோ பண்ணப்படுபவை அல்ல!
மாறாக சமுதாயத்தை நிலைக்களனாகக் கொண்டு கருவாகி, இதயத்தில் உருவாகி
அங்கிருந்து உணர்ச்சியோடும், சத்தியா வேசத்தோடும் "பிரசவ" மாகின்றது.

இந்தவகையில்!
எனது கவிதைகளும் நானும், எந்த ஸ்தானத்தில் இருக்கின்றோம்? என்பதைத்
தெளிவு படுத்த வேண்டிய கடமை என்னுடையதல்ல!
அது! சுவைஞர்களாகிய உங்களின் கடமை என்பதே பொருத்தமாகும்.

எனது கவிதைகளில், யாரும் இலக்கணக் குற்றங்களைத் தேடிக் கொண்டிருக்கத்
தேவையில்லை. ஏனெனில்! நான் இலக்கண ஏடுகளை எட்டிப் பார்த்ததுமில்லை!
தமிழ் மொழியை கற்றவனும் அல்ல. அதனால்! தலைக்கனங் கொண்டு மார்தட்டிப்
பேசுவதுமில்லை! ஏதோ கிழக்கு மண்ணில் பிறந்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன்.
மரபென்றும், புதிதென்றும், மல்லுக் கட்டும் இக்காலகட்டத்தில்! நான் கவிதை
யென்று பட்டதை எழுதிவருகின்றேன். இந்த "தேன்மலர்கள்" கடல் போல் பரந்து விரிந்த
கவிதைப் பூவனத்தில்! கடுகு போன்ற ஒரு இளம் பெண் கவிஞை பதித்துக் கோர்த்த
சின்னஞ்சிறிய
மாலையாகும்.

இந்தப் பூ (பா) க்கள் பற்றிய உங்கள் பக்குவமான விமர்சனங்களை எதிர்பார்க்கின்றேன். ஏனெனில் விமர்சனங்கள் சிருஷ்டி கர்த்தாவை நிச்சயம் நெறிப்படுத்தும் என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவள் நான்.

பத்து ஆண்டுகட்கு மேலாக, முயன்று, முயன்று தோற்றுப் போன எனது முயற்சியை, ஆசையை நிறைவேற்றி என் கவிதைப் படைப்புக்கு நூல் வடிவம் கொடுத்து உதவும் என் வளர்ச்சிக்கு வித்திட்ட சகோதரர் புன்னியாமீன் அவர்கட்கும். என் இலக்கிய மூச்சில் சுவாசித்துக் கொண்டிருக்கும் என் சகபாடியும், எழுத்துக்களை விடாது எழுதத் தூண்டுபவருமான அன்பு மஸீதா புன்னியாமீன் அவர்களுக்கும் எனது இதயம் பிழிந்த நன்றித் துளிகளை காணிக்கையாக்குகின்றேன்.

கூடவே என் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து எனதிலக்கிய வேட்கையிலும், நான் எதிர்கொள்ளும் இன்ப, துன்பங்களிலும் சம பங்கேற்கும் என் கணவர் பொல்கஹவெல எம்.ஆர்.எம். றிஸ்வி அவர்கட்கும் ,எனது வேண்டுகோளுக்கிணங்கி மதிப்பளித்து அணிந்துரை தந்த கலாபூஷணம் ஏ.யூ.எம். ஏ. கரீம் அதிபர் அவர்கட்கும், கல்முனை பிரதேச உதவி அரசாங்க அதிபராக இருந்து மதிப்புரை தந்து இன்று நூல் வெளியாகும் போது பதவி உயர்வு பெற்றுள்ள இளம் எழுத்தாளரும், கவிஞருமான சகோதரர் நற்பிட்டிமுனை பளீல் (ஏ.எல்.எம். பளீல் B.Sc (Cey) S.L.A.S )அவர்கட்கும், வாழ்த்துக் கவிகள் தந்த கவிஞர் என். நஜ்முல் ஹுசைன், கவியரசு எம். எச். எம். ஹலீம்தீன், மறைந்த கவிஞர் கவிச்சுடர் குறிஞ்சித் தென்னவன, கலைநதி பதியத்தளாவ பாறூக் போன்றோருடன், அறிமுகக்குறிப்பு வழங்கிய நிஸா அவர்கட்கும்,

நூலை அழகுற அச்சிட்டு உதவிய அச்சக உரிமையாளர, ஊழியர்கள் மற்றும் அட்டை படத்தை அழகுற அமைத்துதவிய சகோதரர் ஆசிக் முஹம்மட் அவர்கட்கும், என்படைப்புகளுக்கு களம் தந்த ஆசிரியர்களுக்கும் குறிப்பாக என் ஒன்றுவிட்ட சகோதரன் ஏ.எச். சித்தீக் காரியப்பர்(தினகரன்), லீலா ராமையா, அல் ஹாபீஸ் எஸ். எம். ஹனீபா (இலங்கை வானொலி), சோதரி ராஜேஸ்வரி சண்முகம் (வானொலி அறிவிப்பாளர்) ஆகியோருடன் காசுகொடுத்து இந்நூலை வாங்கிப் படிக்கும் நன்நெஞ்சங்களுக்கும் நன்றியுணர்வை தெரியப்படுத்துவதில் மகிழ்வுறுகின்றேன்.

இவ்வண்ணம்

அன்பின்

கலைமகள் ஹிதாயா றிஸ்வி

இல 677 'றிஸ்னா நிவாஸ்'

அஹமட் வீதி, சாய்ந்தமருது 14 (கி.மா)

இலங்கை, 2000/04/15

உள்ளே...... .


1) விந்தை மிகு அன்பிற்கே....
2) அன்னை.
3) ஹஜ்ஜினைப் புகழ்ந்து....
4) ஹாஜிகளே வருக! வருக!.
5) அந்த நாள் என்று வரும்
6) ஓரணி சேர்வோம்
7) உலக சமாதானமும் இளைஞனும்.
8) கொடிய போர்ப் பேயே ஓடு
9) தாய்த் தமிழே வாழி....
10) யாவரும் கேளிர்.
11) தாய்மை அழகே அழகு!
12) அவைகள் மேல்!
13) ஒற்றுமை
14) கேவலம் வேண்டாம்
15) புனிதத் திங்கள்
16) வரும் மாற்றம்
17) சுமக்கின்றாள்.
18) விளையாட்டுக் கலை
19) வாழும் வழி
20) அபிவிருத்திக்கு.....
21) ஓர்ஒற்றைக் குயிலின் ஓலம்
22) முடிவினி மரணம்
23) இறைவனை நாடு
24) கல்வித்தாய் அருள வேண்டும்.
25) அண்ணலை நினைத்து வாழ்வோம்
26) குளிர்ந்த மலைகள் சிவப்பேறும்
27) நாங்கள்
28) எழுவோம் இளைஞர்காள்.
29) நல்லோர்க்கே சொர்க்கம்.
30) மானிடப்பிறவி
31) நயமடைவார்.
32) துணிவு வேண்டும்
33) மனமாற்றம் வேண்டும்.
34) ஒற்றுமையாய் வாழ்வோம்.
35) உழைப்பிற்கு ஊதியம் தா.
36) தென்றல்
37) துணைவன் வேண்டும்
38) விடிவு என்று....
39) தவமழை புனிதகுர்ஆன்.
40) மறப்பது எங்ஙனஞ் சேடி....




## 1. விந்தை மிகு அன்பிற்கே வரைவிலக்கணம் ஆனாய்நீ !

எந்தையே எம்முயிரே;
எங்கு. நீ சென்றாயோ?
சிந்தை நாம் கவல்கின்றோம்
சோர்வுற்று வாழ்கின்றோம்.
உந்தன் பிரி வாலின்று
உறு துணை இழந்து நாம்
வெந்தழவில் புழுவாக
வேதனையால் துடிக்கின்றோம்.

மந்த மாருத மாய் நீயே
மகிழ்வித்தாய் எங்களையே
சந்தனத் தோப் பாக
செழிப்புறயெம் வாழ்க்கையும்
பந்த பாசம் பாசறையில்
பயில் வித்தாய் எங்களை நீ
விந்தை மிகு அன்பிற்கே
வரை விலக்கணம் ஆனாய் நீ!

சாய்ந்தமரு தெம்பதியில்
சகலருமே எப்பொழுதும்
தூய்மையுறும் உன்னன்பைத்
துளியேனும் தயக்கமின்றி
நேயமுடன் மதித்துனது
நேர்மை நல் லாற்றலொடு
வாய்மையரும் பண்புகளை
வாழ்த்தி நிதம் மகிழ்ந்தனரே!

மருத்துவத்தால் பல்லாயிரம்
மக்களது நோய் தீர்த்த
அருந்தந்தையே உம் பிரிவால்
ஆறாகுமெம் வேதனைக்கு
அருமருந்து இனி நாங்கள்
ஆரிடம் தான் பெற்றிடலாம்
கருணையிறை அருளொன்றே
கை கொடுக்கும்; ஆறுகிறோம்.

சன் மார்க்க நெறி பேணி
சாந்தமுடன் நீ வாழ்ந்தாய்
உன் சேவை மனப் பான்மை
உள்ளொன்று புறமொன்று
முன்னொன்று பின்னொன்று
மிழற்றுகிற பழக்க மின்றி
நன்னெறிகள் பேணி நிதம்
நலம் பெறவே வாழ்ந்தாய் நீ.

சேர்பகையே வந்தாலும்
சத்தியத்தில் தவறாது
நேர்மையே நல் கிடவே
நடத்திடுவாய் என்றென்றும்
ஓர்மையிறை எண்ணமே
உன் துணையாம் என்றே நீ
கூறிய அறி வுரைகளின்னும்
காதுகளில் ஒலிக்கிறதே!

அரும் சுவர்க்கத் தலைவாசல்,
அதை விடவும் அருந் தந்தை
பெருந் தகுதி உயர்வாமே
பெருமானார் பொன் மொழியை
கருத்தில் நாம் ஆழமாய்க்
கொண்டழகாய் உன் பெயரைத்
துருப்பிடிக்கா தென்றுமே
தூய்மையுறக் காத்திடுவோம்!

கலைமகளாய் நானென்றும்
கவின் இஸ்லாம் வழியினிலே
கலை இலக்கியப் பணிகளையே
கட்டுப்பாடு ஒழுக்கமுடன்
நிலையாகத் தொடர்ந் தாற்ற
நெஞ்சுறுதி தந்த நீயே
நிலை கலங்க எமை விட்டே
நீத் தாயே இவ்வுலகை!

என்னெழுது கோலுனது
ஆத்மாவின் சாந்திக்காய்
கண்ணீரை மை யாக்கிக்
கரை புரளும் பாசத்தை
பொன்னரிய எழுத்தாக்கிப்
பிரார்த்தனை மாலையாய்
இன்றிங்கே தொடுகிறதே
இறையருள் கவே ஆமின்.

கடந்த 26.11.87 ல் இரத்தினபுரியில் காலமான என்னுயிர் தந்தை மர்ஹூம் வைத்தியக் கலாநிதி டாக்டர் யூ.எல்.ஏ. மஜீத் (ஜே.பி) அவர்களின் பிரிவுத்துயரால் எழுதப்பட்ட கவிதை இது.

- நன்றி - தினகரன் குறிஞ்சிக் குரல்
02.01.88

## 2. அன்னை

பத்து மாதம் சுமந்தே என்னைப்
பரிவுடன் வளர்த்தவள் அன்னை!
இத் தரை தன்னில் இவளருந் தியாகம்
எழுந்தே தொட்டிடும் விண்ணை!

கண்ணே! என்று இமையைப் போலவே
காத்திருப்பாள் இவள் நிதமே!
பொன்னே என்றும் பூவே என்றும்
பொழியும் அன்போர் விதமே!

ஈயோடெறும்பு எதுவும் அணுகா(து)
இனிதாய் வளர்த்த உள்ளம்
தோயும் அன்புச் சுடராய் என்னைத்
துலங்க வைத்தாள்! உய்வோம்!

பள்ளிப் பாடம் சொல்லித் தந்தே
பண்பாய் அனுப்பி விடுவாள்
வெள்ளி பூத்தே விடியும் வானாய்
விளங்க அனைத்தும் இடுவாள்!

பட்டம் பெற்றே பதவிகள் பெற்றுப்
பாரினில் துலங்க வைத்தாள்
தொட்டுப் பேசித் துணையாய் நிற்கும்
தூய உள்ளம் அன்னை!

உதிரந் தன்னைப் பாலாய் உதிர்த்து
ஊட்டி வளர்த்தவள் அன்னை
இதயத் தரையில் வாழும் உள்ளம்
இவளை மறவேன் மண்ணில்!

நன்றி : அல்லி ஆண்டு மலர்.
(திருமலை இளைஞர்வட்ட வெளியீடு.)

## 3. ஹஜ்ஜினைப் புகழ்ந்து பாடுங்கள் !

''ஹஜ்''ஜினைப் புகழ்ந்து பாடுங்கள் - புனித
''க.ஃ.பா'' விலே ஒன்று கூடுங்கள்!
இஸ்மாயில் நபியின் தியாகத்தை - நீங்கள்
இதயத்திலே! நினைவு கூருங்கள்!

★★★★

''ஸம்ஸம்'' தண்ணீரை அருந்துங்கள் - புனித
தியாக நாளில் மனம் திருந்துங்கள்!
இம்மையிலே அறம் பேணுங்கள் - முடிவில்
இறையோனின் அருட்பதம் காணுங்கள்!

★★★★

மக்காவில் சனவெள்ளம் பாருங்கள் - அந்த
மாண்பினிலே களி கூருங்கள்!
தக்கோராய்த் தரணியில்வாழுங்கள்- இறையோன்
தந்திட்ட குர்ஆனை ஓதுங்கள்!

★★★★

ஆடை அணிமணி பூணுங்கள் - தூய
அல் - ஹஜ்ஜை ஏழையில் காணுங்கள்!
மூடத்தனங்களைச் சாடுங்கள் - நல்ல
மூமீன்கள் அறவழி நாடுங்கள்!

★★★★

இஸ்லாம் வழி சென்று உய்யுங்கள் - நல்ல
இதயமுடன் ''ஸக்காத்'' செய்யுங்கள்!
கசியும் உளங்கொண்டு நில்லுங்கள் - ஏழை
கண்ணீரைத் துடைத்தின்பம் கொள்ளுங்கள்!

★★★★

''ஹஜ்''ஜினைப் புகழ்ந்து பாடுங்கள் - புனித
''க.ஃ.பா''விலே ஒன்று கூடுங்கள்!
இஸ்மாயில் நபியின் தியாகத்தை - நீங்கள்
இதயத்திலே! நினைவு கூருங்கள்!

நன்றி : சிந்தாமணி

## 4 ஹாஜிகளே வருக! வருக

ஐம் பெருங் கடமை தனி லொன்றை
அழகுறு மக்கா நகர் சென்று
பொய்மையில்லா நெஞ்சோடு
புனிதமுடனே நிறைவேற்றி
மெய்மை யிறை யோன் அருள் பெற்று
மிளிரும் ஹாஜிகாள் வருக!

❖ ❖ ❖ ❖

புனித மதினா நகர் சென்று
அண்ணல் நபியின் சியாரத்தை
பெருமையாகத் தரிசித்தே
பேறு பெற்றே திரும்பி வரும்
அரிய ஹாஜிகாள் வருக! வருக!
அல்லாஹ்! அருளால் நலம் பெறுக!!

❖ ❖ ❖ ❖

“சபாமர்வா” இடைநடுவில்
சந்தம் திகழும்;” தொங்கோட்டம்.”
சுபமாய் எழு முறை யோடிச்
சுவைக்கும் “ஸம்ஸம்;” தண்ணீரில்
தாகம் தீர்த்து உளம் மகிழ்ந்த
தகை சேர் ஹாஜிகாள்! வருக!

❖ ❖ ❖ ❖

மினா பள்ளத் தாக்கினிலே
மேன்மை இப்றாஹீம் நபி செய்த
தனயன் இஸ்மாயிலின் தியாகம்
தம்முன் ஏற்று மன நிறைவாய்ப்
புனிதம் பெற்ற ஹாஜிகளே!
புன்னகை சிந்தியே வாருங்கள்!

நன்றி : சிந்தாமணி.

# 5. அந்த நாள் என்று வரும்

உழைத்துழைத்து நாமுந்தான் ஓடாய்த்தேய
உழையாதார் ஊதித் தான் பெருக்கக் கண்டோம்.
இழைத்தே நாம் இடுப்பொடிய ஈரமில்லா
இதயத்தார் இழுத்துறிஞ்சி மேலே சென்றார்!

முதுகினிலே கூடையினைத் தாங்கி நாமும்
முதுகொடியக் கொழுந்தெடுத்துக் கொணர்ந்து சேர்த்தோம்
புதுவாழ்வு எதுவும் நாம் கண்டதில்லை!
புல்லர்கள் வாழ்வுக்கே உரமாய்ப்போனோம்!

ஓட்டை"லயம்" தானெமது உலகும் வாழ்வும்,
உழைப்புத்தான் உயிர்எமக்கு, ஓய்வோ தூக்கம்!
காட்டையெல்லாம் கழனிகளாய்ச்செய்தோம் எங்கள்
கனவுகளோ கண்ணீரில் கரையக் கண்டோம்!

மலையகத்து இலைகளுக்கு பசுமை சேர்க்க
மணிமணியாய் வியர்வையினை வடித்துத் தந்தோம்
நிலை மாறி எம் வாழ்வில் பசுமை பூத்து
நிம்மதியாய் வாழும் நாள் என்று பூக்கும்!

நன்றி- : வீரகேசரி வாரவெளியீடு.-

## 6. ஒரணி சேர்வோம்

புதுப்புது இலக்கிய வடிவம்
பொலிவுடன் பூமியில் படைப்போம்,
எதுசரி, எது பிழை எனவே
ஆய்ந்தொரு முடிவினை எடுப்போம்!

✽ ✽ ✽ ✽

இலக்கியவாதிகள் மோதி!
ஈன நிலைக் கடிகோலி
கலக்கிடும் போக்குகள் வேண்டாம்,
கை கோர்த் தொழுகுதல் வேண்டும்!

✽ ✽ ✽ ✽

சுவைஞர் தம் மனப்பசி தீர!
துயர் நிலை அடியொடு மாற!
சமைத்திடுவோம் நவ கலைகள்!
சாதனைக் கிங்கில்லை விலைகள்!

✽ ✽ ✽ ✽

வீழ்ந்தவர் எழுந்திடும் வழிகள்
விளம்பிடும் கவியொடு கதைகள்
ஆழ்ந்த நல் அறிவினைப் பிழிந்து
ஆக்கிடுவோம் ஒன்று கலந்து!

✽ ✽ ✽ ✽

எழுத்தினுக் கெதிர் முனையாக
இலக்கிய வாதியின் வாழ்க்கை!
பிழைபடும் இழிநிலை மாறி!
பிழையற ஒழுகுதல் வேண்டும்.

✽ ✽ ✽ ✽

வாழ்வொரு சிறுதுளி ! அரிய
வளர் கலை உலகினில் பெரிது!
பாழ் நிலை அகன்றிட உழைப்போம்!
படைப்பாளிகள் கைகளைப் பிணைப்போம்!

நன்றி- :வீரகேசரி வாரவெளியீடு.-

## 7. உலக சமாதானமும் இளைஞனும்!

விமான மொடு"ராக்கெட்" ஏறி
  விண்ணகம் அளந்த போதும்!
இமாலய முகட்டைத் தொட்டு
  எளிதெனக் கண்ட போதும்
சமாதானம் என்ற காற்று
  தரணியில் வீசும் வண்ணம்
அமைதியைப் பேணும் பண்பு
  அகன்றிடில் இன்பமேது?

சாதியைத் தகர்த்து மண்ணில்
  சமத்துவம் தன்னைப் பேணி
நீதியை வளர்த் துயர்த்தி
  நிலத்திடை அமைதி கண்டு
சாதனை இதுவே என்று
  சகலரும் ஒன்று பட்டு
வேதனை அறுந்து சாய
  வினை செயல்! இளைஞர்பங்கே!

வேர் அற மரங்கள் சாயும்
  வீழ்ந்திடும் இலைகள் காயும்.
நீர் இல்லாப் பயிர்கள் யாவும்
  நிச்சயம் வாடிச் சாகும்.
பார்தனில் வாழும் மக்கள்
  பண்புடன் சேர்ந்து வாழும்
சீர்மை தான் மறந்து போகில்
  செகந்தனில் அமைதி சாகும்!

பூமியை சுவர்க்க மாக்கி
  பொலிவினை முகங்கள் தேக்கி
தேமது ரத்து வெள்ளம்
  திரட்சியாய் எங்குமோட
நா மெலாம் ஒன்று பட்டு
  நற்சமா தானந் தன்னை
வாருடன் வளர்ப்ப தொன்றே
  வழி யெனக் கண்டு சேர்வோம்!

இன மத வேறு பாடு
  இழி வெனக் கண்டு ணர்ந்து
மனந் தனில் மனிதர் யாவும்
  ஓர் குலம் என்ற எண்ணம்
கனிந்திடில் மோதல் யாவும்
  கரைந்துமே அமைதி பூக்கும்
சினமது தீர்ந்து போனால்
  செக மெலாம் செழிப்புத் தானே.. ?

அவர் மொழி அவரவர்க்கு
  அன்னையின் வடிவமாகும்.
எவர் மனத் துள்ளு மிந்த
  எண்ணமே உறைய வேண்டும்.
சுவர்தனைப் போட்டு வீணே
  துயரினை வளர்த்தல் கூடா!
சுவர்க்கமே உண்டு பண்ண
  துணிந்தெழு! இளைஞு நீயும்!

சுதந்திரம் மானிடர்க்கு
  சொந்தமாம் என்ற வுண்மை
நிரந்தரம் வாழு மாகில்
  நிலத்திடை அமைதி பூக்கும்.
இதமுடன் உலகு வாழும்
  இளைஞர்காள் ஒன்று கூடி
நிதமிதை வளர்த்து மண்ணில்
  நிம்மதி காக்க வாரீர்!

பதியதளாவளையில் நடைபெற்ற
கலாசாரப் போட்டியில் சாய்ந்த மருது
அல் - ஹிதாயத் இளைஞர் கழகத்தின்
சார்பில் முதலிடம் பெற்ற பரிசுக் கவிதை.
அம்பாறை மாவட்டத்திலுள்ள தேசிய இளைஞர்.
கழகங்களுக்கிடையில் நடைபெற்றது.

-நன்றி: **"கவிதைச்சரம்;" 1988**
(இலங்கை வானொலி.)

## 8. கொடிய போர்ப் பேயே ஓடு!

மண்ணிலே! அமைதி யோங்க!
மனமெலாம் மகிழ்வு தேக்க
புண்ணிய பூமியாகப்
புலர்ந்திடப் போரே ஓடு!

✞ ✞ ✞ ✞

மனிதனை மனிதம் சாய்த்து
மாண்பினை அழித்து வீழ்த்திச்
சனியனாய் ஆட்டம் போடும்
சண்டையே விரைந்து போநீ !

✞ ✞ ✞ ✞

ஆயுத மேந்தி நாளும்
அழிவுறும் அவலம் நீங்கி
தாயுடன் பிள்ளை யாகத்
தழுவிடப் போரே ஓடு.

✞ ✞ ✞ ✞

வீட்டினுக் கெரியை யூட்டி
வீதியில் பிணத்தைக் கூட்டி
கூட்டு வாழ்க்கையைக் கொல்லும்
கொடிய போர்ப் பேயே ஓடு!

✞ ✞ ✞ ✞

அமைதியே சொர்க்க மாகும்
ஆனந்த வெள்ள ம:.தே
சமரெனும் கொடிய நோயே
தரணியை விட்டு ஓடு!

........... -நன்றி: பாசமலர்.-

## 9. தாய்த் தமிழே வாழி!

வாள்ளுவர் இளங்கோ கம்பன்
வழிதனில் புலவர் கோடி!
தெள்ளிய கவிதை பாடி
தேனெனச் சுவைக்க நாமும்
அள்ளியே பருகி இன்ப
அருவியில் குளித்து நித்தம்
தொல்லைகள் மறக்க வைக்கும்
சுந்தரத் தமிழே வாழி !

\+ + + +

பாரதி உமறு சித்திலெவ்வை நல்ல
இக்பால், பாரதிதாசன் போன்றோர்
ஆரமாய்ச் சூடி யுன்னை
அளவிலா இன்பங் கண்டார்
சேர்ந்திடும் வறுமை துன்பம்
சிதைவுறு வாழ்கை கண்டும்
சோர்ந்திடாதுன்னைப் பாடி
சுகம் பல கண்டார் அம்மா!

\+ + + +

வாழ்வினைத் துறந்தோர் கூட
வடிவுனைத் துறந் தாரில்லை!
தாழ்விலா நிலையிலிந்தத்
தரணியோர் புகழ்ந்து போற்றும்
நீள் பழம் பெருமை யோடு
நித்தமும் வாழு மெங்கள்
வீழ்வுறா மொழியே என்றும்
வீறுடன் வாழ்க நீடே

.........

## 10. யாவரும் கேளிர்!

சாதி மத பேத மின்றி
சரி சம்மாய் மனிதர் நாம்
மேதினியில் ஒரு குடியாய்
மிடுக்காய் நிமிர்ந்து வாழ்வோம்!

★★★★

சிறிய குருவிக் கூட்டமெல்லாம்
சேர்ந்து இனிதே வாழ்கையில்
அறிவிற் சிறந்த மனிதர் நாமும்
அழிவுப் பாதை செல்வதா...?

★★★★

உலகில் வாழும் மனிதர்க்கெல்லாம்
ஓடும் குருதி ஒரே நிறம்.
கலகம் பண்ணிக் கடிந்து வாழ்தல்
காட்டு விலங்கின் இழி குணம்!

★★★★

பிறப்பில் மனிதர் எவருமிங்கு
பெரிது சிறிது இல்லையே
சிறக்கும் வாழ்வில் செயலில் நேசச்
சிந்தையாலே உயருவர்!

★★★★

பழிகள் செய்து பாவியாகிப்
பாரில் வாழ்வோர் சிறியவர்!
தெளிந்த அறிவு அன்பினோடு
சேர்ந்து இனிது வாழுவோம்

-நன்றி: பாசமலர்-

# 11. தாய்மை அழகே அழகு!

மழலையைத் தாங்கிச் செல்லும்
மாதினில் உண்மையான
அன்பினைக் கண்டேன்! மண்ணில்
அழகெனிற் தாய்மை பேறே!

“குளு குளு” மழலை தன்னை
கொஞ்சிடும் அழகு - மற்றும்
அழுகையைப் பாட்டினாலே
அணைப்பதும் அழகு காண்பீர்!

உலகினில் கருணை வெள்ளம்
உருகிடும் தாய்மை யுள்ளம்
மலரவள் குழந்தை பெற்றாள்
மலர்ந்திடில் மொட்டுத்தானே!

தாய்மையே பெண்மை வாழ்வில்
தனிநிகர் கனிவு ஆகும்
காய்களா அழகு இல்லை
கனிகளா அழகு சொல்வீர்!

விளை நிலம் அழகா சொல்வீர்
வெறு நிலம் அழகா சொல்வீர்
அழகில் தாய்மை மேலே
அடுத்தவை யாவும் கீழே!

நன்றி: இலங்கை வானொலி
பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி.

# 12. அவைகள் மேல்!

காட்டில் வாழும் மிருகங்கள்
கயமை செய்யா உருவங்கள்.
நாட்டில் வாழும் மனிதரிலும்
நலமே செய்யும் உருவங்கள்!

++++

ஏட்டில் படித்த அறிவில்லை
இறையைக் காணும் நெறியில்லை
காட்டில் கூடி வாழுகிற
காட்சி கூட நாட்டிலில்லை

++++

உயர்வு தாழ்வு அவைக்கில்லை
உலகை ஆளும் ஆவலில்லை
கயமை மிருக வாழ்க்கையிலே
காணல் கூட அறிதாகும்!

++++

பொறாமை கொண்ட அகமில்லை
புரியுந் தன்மை அவைக்கில்லை!
கருமை நெஞ்சத் திலுமில்லை!
காட்டில் ஒன்றாய்க் கூடி வாழும்!

++++

உள்ளம் தன்னில் ஒரு எண்ணம்
ஒரு நாள் கூட வைத்து விடா(து)
கள்ளம் கொண்ட மனிதரிலும்
காட்டு மிருகம் மேலாமே!

-நன்றி: மருதாணி ஆண்டுமலர்.
(யாழ்வெளியீடு)

# 13. ஒற்றுமை

இதயத்தில் இருள் தன்னைக் களைந்தெடுத்து -நல்ல
இசை தரும் வீணையாய்க் குடைந்தெடுத்து!
உதயத்தில் பூபாளம் மீட்டிடுவேன் - உன்
உயர்வுக்கு நல்வழி காட்டிடுவேன்!

★★★★

தீமையை முளையிலே தீயிடுவேன் - எந்த
தீயவர் வாழ்வையும் திருத்திடுவேன்!
ஆமை போல் அமைதியாய் வாழச் சொல்வேன்- நெஞ்சில்
ஆறுதல் வார்த்தைகள் கூறி வெல்வேன்.

★★★★

பேசும் மொழி உயிர் முச்சு என்பேன் - மனிதர்க்குள்
பேதமை பாராதார் உயர்ந்தோரென்பேன்!
கூசும் நா வேற்றுமை கூறிநின்றால் - மனிதா
கூடி நாம் வாழ்ந்தா லோர்குறை வருமோ?

★★★★

எல்லா குருதிகளும் ஒரு நிறமென்பேன் - அவற்றை
படைத்த இறைவனும் ஒன்று என்பேன்!
இல்லை என்றால் தெய்வம் இவ்வுலகிலில்லை - மனிதா
வல்லவன் துணையின்றி ஏதுமில்லை!

★★★★

சாதிகள் ஆண் பெண் இரண்டு என்பேன் - இங்கு
யாவரும் சரி சம மாந்தரென்பேன்.
நீதி நிலை கெட்ட மனிதர்களை - கண்டு
நெஞ்சமே நெருப்பாக வேகுதடா

ஏழையர் யாவரென் உடன் பிறப்பே - அவர்
ஏற்றம் காண சேவை செய்திடுவேன்!
கோழையாய் வாழ்வதை நான் வெறுப்பேன் - அவர்
குறுக்கு வழி சென்றால் நான் தடுப்பேன்.

★★★★

அன்பு தான் என் மனச் சாந்தியென்பேன் - அதை
இதயத்தில் வைத்து நான் பேணிடுவேன்!
பண்பான மாந்தரை வரவழைப்பேன்- கவி
பாவாலே அவர் வாழ வாழ்த்துரைப்பேன்!

★★★★

கலைந்தோடும் நெஞ்சங்கள் துணையிருப்பேன் - இந்த
நிலையில்லா வாழ்வில் நான் நிறைந்திருப்பேன் - எந்த
நிலை வந்த போதும் நான் - வாழ்வில்
செய்ந் நன்றி மறவாமல் வாழ்ந்திருப்பேன்.

★★★★

கூடாதே கூடாத கூட்டத்திலே - உன்
குணம் கெட்டுப்போகும் அக் கூட்டத்தினால்.
நாடாதே மது மாது சூது கொலைதன்னை - அவை
நாளெல்லாம் உன் வாழ்வை அழித்தொழிக்கும்.

★★★★

கண் முன்னே கயவரைக் கண்டேனென்றால் - நான்
காறியவர் முகத்தின் முன் உமிழ்ந்திடுவேன்!
என் மனத் தோட்டத்தில் ஏங்குகிறேன் - நாட்டில்
இன மூன்றும் ஒற்றுமை காண்பதென்று?

★★★★

பொல்லாத காலமினி மாறவேண்டும் - அதில்
போலிகளும் புரட்டல்களும் ஒழிய வேண்டும்.
இல்லாமை நிலை முற்றாய் மாறவேண்டும் - பொருள்
இருப்பவர் இல்லார்க்கு ஈயவேண்டும்!

இந் நாட்டில் எல்லோரும் வாழவேண்டும் - இங்கே
இன மூன்றும் ஒற்றுமையே காண வேண்டும்!
வன் முறையால் நன்மைகள் சேர்க்கலாமோ? - நல்ல
வழி கண்டு அமைதி நிலை நாட்டலாமே!

..........

1987 ஜூன் மாதம் (கி:மா) தேசிய இளைஞர் சேவை மன்றங்களுக்கிடையே கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் தரப்பட்ட தலைப்பில் கவிதை எழுதி வாசிக்கப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை இது.

-நன்றி- தினகரன் வாரமலர்.

## 14. கேவலம் வேண்டாம்!

ஆடையைத் திருத்து நல்ல,
  அழகுடல் மறைத்து நில்லு!
கேட்டி உடலைக் காட்டும்
  கேவலம் வேண்டாம் சொல்லு!

✂ ✂ ✂ ✂

அரிவையுன் உடலை றோட்டில்
  அளி விழி விருந்தாய் ஆக்கி
சரிவதேன்! பண்பை விட்டு
  தனித்துவ மரபைக் கூட்டு!

✂ ✂ ✂ ✂

தொடை இடை தொப்புள் என்று
  தோகையுன் வனப்பை எல்லாம்
கடைதனில் பொருளாய் நீயும்
  காட்டிடும் நிலையை மாற்று!

✂ ✂ ✂ ✂

தாய் வழி வந்த வுன்றன்
  தகைமையாம் பண்பை மாற்றி!
பேய் நடை போடும் பெண்ணே!
  பேதையே திருந்திக் கொள்வாய்!

# 15. புனிதத் திங்கள்.

மாண்புடன் பொலியும் "ரமழான்"
மாதமோ "ரஹ்மத்" தாகும்.
நீண்ட நாள் பாவம் யாவும்
நீக்கிடும் புனிதத் திங்கள்.
பூண்டிடும் தர்மக் கொள்கை
பூமியில் மலியப் பண்ணும்
ஆண்டியோ டரசன் சேரும்
அறத்தினை வளர்க்கும் மாதம்!

✈ ✈ ✈ ✈

வஞ்சகம் பொய்ம்மை மாந்தர்
வாழ்வினை அழிக்கும் சூது
நஞ்செனும் செயல்கள் யாவும்
நலமுடன் அறவே நீக்கி
நெஞ்சினில் அன்பு பாசம்
நிறைந்து மே மாந்தர் யாவும்
ஒன்றென மறையோன் வேதம்
ஓதியே வாழும் மாதம்

✈ ✈ ✈ ✈

ஆயிரம் இரவில் காத்து
அருந்தவம் புரிந்து ஈற்றில்
நேய (இ) ரா! "லைலத்துல்கத்ர்;" இந்
நிலமிசை அருளாய்ப் பொங்கும்!
தூயதாய் துன்பம் நீங்கித்
துலங்கிடும் ரமழான் தன்னை
நேயமாய் வருக! வென்றே
நெஞ்சினால் வர வேற்கின்றோம்

-நன்றி சிந்தாமணி.

## 16. வரும் மாற்றம்!

உப்பு நன் நீருள் வீழ்ந்தால்
   உடன் கரைந்தழியுமாப் போல்
ஒப்பிலா நட்பும் பொய்மை
   குறுக்கிடில் அழிந்து போகும்!

□ □ □ □

ஒளியது மறைந்து போக
   உறைந்திடும் இருளைப் போல
வளர்ந்த நல் உறவும் தேயும்
   வளரும் சந்தேகத்தாலே

□ □ □ □

ஒரு மொழி பேசும் நல்ல
   ஈரின மாந்தர் நம்முள்
பிரிவினை எதனால்...? நல்ல
   புரிந்துணர் வற்ற தாலே

□ □ □ □

"சீதனம்" தன்னைச் சாடி
   சீற்றமாய் எழுது வோரும்
காதலை மறந்து "காசைக்"
   கண்டிடில் மாறுகின்றார்!

□ □ □ □

நெஞ்சினில் அன்பு பாசம்
   இறைவனின் மாறா நேசம்
விஞ்சிய கல்வி நாட்டம்
   விதைத்திடும் உலகில் மாற்றம்.

-நன்றி! தினகரன் வாரமலர்.

# 17. சுமக்கின்றாள்!

கொட்டும் மழையில் குளிரும் பனியில்
கோதை தோய்ந்து! மலை மீது
எட்டி நடந்து இலைகள் கொய்து
ஏங்கும் நெஞ்சம் மிக நோக!
அட்டை களிரத்தம் குடிக்கும் போதும்
அவளோ! கூடை சுமக்கின்றாள்.

☞ ☞ ☞ ☞

உதயம் தொடங்கி மாலை வரைக்கும்
உழைக்கும் கைகள் ஓயாது
சதையும் எலும்பும் குளிரில் உறைய
சாவுக் கஞ்சா மன தோடு
விதி தான் வாழ்க்கை என்றே நொந்து
விழி நீர் சிந்தி நடக்கிறாள்!

☞ ☞ ☞ ☞

பள்ளி செல்லும் வயதில் ஏழ்மைப்
பளுவைத் தானே சுமக்கின்றாள்!
கல்வியில்லா வாழ்வை எண்ணிக்
கலங்கி மலையில் தவழ்கிறாள்
அல்லும் பகலும் உழைத்தும் ஓட்டை
"லயத்தில்" உறங்கா திருக்கின்றாள்

☞ ☞ ☞ ☞

தொட்டில் குழந்தை "ஏணைக்குள்ளே"
தூங்க வைத்தே அதைப்பிரிந்து
எட்டாதுயர்ந்த உச்சி மலையில்
ஏறிக் கொழுந்து மிகக் கொய்தும்.
வாடும் நிலையை நாளும் கொண்டு
வறுமை தனையே சுமக்கிறாள்!...

-நன்றி: வீரகேசரி.

## 18. விளையாட்டுக் கலை வளர்ப்போம்!

உடலோடு உளத்திற்கும் வலு வளித்து
உறவாடி ஒற்றுமையை வளரவைத்து
திடமான சமுதாயம் வளர்வதற்கு,
தேவை நல் விளையாட்டுக் கலைகள் என்றும்

☼ ☼ ☼ ☼

சோம்பலோடு சோர்வுதனை மறந்து வாழ
சுறு சுறுப்பால் உடலுளத்தில் நிறைவு தோன்ற
“நாம்” என்ற நிலை வளர்த்து நலம் விளைக்க
நாட்டினிலே விளையாட்டுக்கலை வளர்ப்போம்!

☼ ☼ ☼ ☼

செகமெங்கும் சென்று விளையாடி நிற்போம்.
சிரித்த முகத்தோடு கை கோர்த்து வைப்போம்
நகத்தோடு தசைபோல நல்லுறவை
நாம் செல்லுமிடமெங்கும் நாட்டி வைப்போம்!

☼ ☼ ☼ ☼

வெற்றிக்கு முதற்படியே தோல்வி என்று
விளையாட்டில் சளைக்காது முயன்று வெல்வோம்!
கற்றிடுவோம் “கிரிகற்றை” காற்பந்தோடு
கரப்பந்து வலைப்பந்து பூப்பந்தெல்லாம்

☼ ☼ ☼ ☼

நட்புறவு சோதரத்துவம் நல்லிணைப்பு
நல்லபடி அகிலத்தில் வளர்வதற்கும்
கட்டுப்பா டொழுங்கனைத்தும் நிலைப்பதற்கும்
கனிவோடு விளையாட்டுக் கலை வளர்ப்போம்.

-நன்றி: கலைமலர்

## 19. வாழும் வழி!

நடந்ததை நினைத்து வருந்தாமல் - இனி
நடப்பதில் கவனம் செலுத்தி விடு!
உடைந்த பாத்திரம் ஒட்டுமுன்னம் - நல்ல
உயரிய பாத்திரம் படைப்பது மேல்
இடரினைக் கண்டு அஞ்சாது - அதை
இதய பலத்துடன் எதிர் கொள்ளு!
இறைவனைத் துதித்துக் கண்ணியமாய்- தினம்
கடமையைச் செய்து உயர்வடைவாய்!

✿ ✿ ✿ ✿

போன "பொழுதுகள்" திரும்பாது - என்றும்
பொய்களும் நிலைத்து வாழாது!
மானங்காத்து வாழ்பவரை - இங்கு
மன்பதை என்றும் மறக்காது!
தேனாய் வாழ்வை அமைப்பதற்கு - நிதம்
திடமே! வேண்டும் நெஞ்சத்தில்
வானும் மண்ணும் நம் சொந்தம் - என்று
வாழ்ந்தால் இன்பம் உலகுய்யும் !

✿ ✿ ✿ ✿

சாதிபேதம் தொலைத்தே தான் - நல்ல
சமத்துவம் வளர்த்தல் பணியாகும்
நீதிநேர்மை செயல்நுட்பம் என்றும்
நெஞ்சில் அன்பு தனை வளர்த்து
மேதினிதன்னில் ஒற்றுமையாய் - நல்ல
மிடுக்காய் வாழ்வது வாழ்வாகும்!
சாதனை வேண்டும் வாழ்க்கையிலே - வரும்
சந்ததி வாழ்த்த வாழ்ந்திடனும்!

# 20. அபிவிருத்திக்கு இளைஞர் சக்தி

எழிலுறு உலக மாதா
இதமாய் இளைஞர் சக்தி
தொழிலெனும் கருவி கொண்டு
துரத்துதல் ஆகும் பொல்லா
இழிவிருள் வறுமை தன்னை
இரவியாய் மிளிரும் தூய
இளைஞரே ஒன்று கூடி
இன்பமாய் உழைக்க வாரீர்!

♈ ♈ ♈ ♈

பள்ளியில்படித்தோம் மேன்மை
பட்டங்கள் பலவும் பெற்றோம்
கொள்கையில் உறுதி பூண்டு
குவலயம் தன்னை மீட்க
தெள்ளிய உணர்வினோடு
திறம்பட உழைத்து மண்ணை
வெள்ளிடை மலையாய் என்றும்
விளங்கிட வைக்க வாரீர்!

♈ ♈ ♈ ♈

காடுகள் மாய்த்து நல்ல
கழனிகள் உண்டு பண்ணி
மேடுகள் வளம் படுத்தி
மேன்மை சேர் பயிர் வளர்த்து
வாடிய முகங்கள் யாவும்
வசந்தமே கண்டு பாடி
கூடியே மகிழ்ந்து வாழ
கூவியே உழைக்க வாரீர்!

♈ ♈ ♈ ♈

ஏர் பிடித்தெழுவோம் நல்ல
எந்திரம் துணையாய்க் கொள்வோம்!
போர்வைகள் தம்மை நீக்கி
புதுமைகள் உழைப்பில் செய்வோம்.
கார் மழை தன்னைத் தேக்கி
காசினிக் குதவும் வண்ணம்
சீர்மையாய் பயிர்க்குப் பாய்ச்சி
செகமது செழிக்கச் செய்வோம்!

தேயிலை இறப்பர் தெங்கு
   சிறந்திடும் வயலின் நெல்லு
ஆயநற் கனிகள் நூறும்
   அறு சுவைக் குதவும் யாவும்
நேயமாய் வளர்ப்பதாலே
   நிலத்திடை வளங்கள் கூடும்.
சாய்ந்திடும் கதிர் வளர்த்தால்
   தலையை நாம் நிமிர்த்தலாமே!

♈ ♈ ♈ ♈

இளைஞர் கை இணைந்தா லிங்கு
   எந்கிலை அபிவிருத்தி.....?
வளைக்கரம் வாளை ஏந்தி
   வயற் கதிர் அறுக்கும் போதும்
களை தனைப் பிடுங்கி வீசிக்
   காரிய மாற்றும் போதும்
சளைத்துப் போம் வறுமைக் கோடு
   காணுமே வளத்தை நாடு!

♈ ♈ ♈ ♈

உயர்வுக்கு இளைஞர் சக்தி
   ஒன்று பட்டிணையு மானால்
நயம் பல வந்து கூடும்
   நலிவுகள் மறைந்து ஓடும்
புயங்களை உயர்த்தி யிந்தப்
   பூமியை பசுமை யாக்க
செயற் பட எழுவீர்! எங்கள்
   இளைஞரே! நாமே! சக்தி!!!

♈ ♈ ♈ ♈

ஜனாதிபதி ஆர் பிரேமதாச
அவர்களின் தலைமையின் கீழ்
மஹரகமை தேசிய இளைஞர்
சேவை மன்றத்தால் அகில
அலங்கை ரீதில் நடத்திய
கவிதைப் போட்டியில் முதல்
பரிசு பெற்ற கவிதை. (1985)

## 21. ஓர் ஒற்றைக்குயிலின் ஓலம்!

சோலையிலே ஓர் ஒற்றைக் குயில்
சோகக் குரலிலே கூவுதடி!
மாலையிலும் அதிகாலையிலும்- அது
வாடி மனம் வெந்து கூவுதடி!

✧ ✧ ✧ ✧

சின்னஞ் சிறு பராயத்திலே
சேர்ந்த துணை மறைந்தோடியது
வண்ணக் கருங்குயில் தன்துணையை - கிட்டே
வாவென்ற ழைத்துமே கூவுதடி!

✧ ✧ ✧ ✧

கொஞ்சிக் கலந்துமே மாமரத்தில்!
கூடித் துளிர் கொய்து பாடியதும
நெஞ்சிற் கனவுகள் கூடிடவே - அன்று
நித்தம் குளிர்ந்ததை எண்ணுதடி!

✧ ✧ ✧ ✧

சோலையிலே பறந்தோடிய தும்
சொர்க்கமென ஒன்று கூடியதும்.
பாலையருந்திப் பழஞ்சுவைத்தே - காதற்
பாடலிசைத்ததைக் கூவுதடி.

✧ ✧ ✧ ✧

சொந்த அனுபவம் யாவு மின்று
சொப்பன மாகவே போன தெண்ணி
வெந்து மிக நொந்து கூவுதடி - அதன்
வேதனை என்று தான் தீருமடி...?

-நன்றி : கல்முனை- இளையநிலா.

# 22. முடிவினி மரணம்!

துள்ளினேன் இளமை வாழ்வில்.
துயரினைத் தூர விட்டேன்!
பள்ளியில் படித்த பின்னே
பதவியும் வந்த தாலே
கொள்ளையாய் இன்பந் தேடி
குவலயம் தனில் - அலைந்தேன்,
உள்ளத்தே கோடி ஆசை
உதித்தது செயலில் செய்தேன்!

✯ ✯ ✯ ✯

ஆடினேன் அரங்கில் - புகழை
அங்கும் யான் தேடிக் கொண்டேன்,
சூடினேன் வெற்றி வாகை!
"கலை" யென வாழ்வைக் கொண்டேன்.
தேடினேன் செல்வம் கோடி
திருப்தியோ; எனக்கு இல்லை!
நாடினார் பல்லோர் என்னை!
நாடினேன் இன்பும் தன்னை!

✯ ✯ ✯ ✯

வதுவையும் செய்தேன் வாழ்வில்
வரமெனக் குழந்தை பெற்றேன்.
மதுவினைக் கூடத் தொட்டேன்
மங்கையைத் தேடிச் சென்றேன்,
எதுவுமே விட்டேன் என்று
எண்ணுதற் இல்லை! இன்றோ,
முதுமையில் நோயில் வீழ்ந்தேன்!
முடிவினி மரணம் தானே!

-நன்றி : கொழும்பு- வதனம் மலர்.

## 23. இறைவனருளை நாடு!

மண்ணகத்தில் மதி மயங்கி,
  வாழுகின்ற மனிதா
எண்ணிப் பாரு! இதயந் தன்னில்
  இருளை வைத்தால் இனிதா.....?

✦✦✦✦

மரணமுண்டு வாழ்க்கையிலே
  மறந்து நிற்றல் சரியா?
இறைவனருள் தன்னை நாடி
  இனிமை பேணு நெறியா (ய்)!

✦✦✦✦

உலகந் தன்னில் உன்னை யல்லாஹ்
  உயர்வதாகப் படைத்தான்!
கலகம் பண்ணிக் களவு செய்து
  காசினியைக் கெடுத்தாய்!

✦✦✦✦

கடமை ஐந்தை நீ மதித்து
  கடவுளருளைப் பெறுவாய்!
உடமை புனித இஸ்லா மென்று
  உணர்ந்து ஏற்று உயர்வாய்!

✦✦✦✦

செகத்தை விட்டு ஏகும் போது
  சேர்ந்து என்ன பெருகும்...?
இகத்தில் செய்த நல் அமல் தான்
  இணையும் அறிந்து ஒழுகு!

நன்றி: இலங்கை வானொலி
இளைஞர் மன்றம்.

V.THINAKARAN, TEL: 051-2224716
LIBRARY
KELLIEWATTE - PATANA

## 24. கல்வித்தாய் அருள வேண்டும்!

துள்ளி வரும் வெள்ள மென கல்வித் தாயே!
தூயமனத் துள்ளறிவை அள்ளித் தாவேன்.
கள்ளமிலா என் நெஞ்சில் கல்வித் தாயே!
காதலுடன் கலந்துயர்வு பெற்றுத்தாவேன்!

▲▲▲▲

ஏற்றமுடன் நான் செய்யும் பணியை சிலபேர்
இயலாமையால் இகழும் நிலையைக் கண்டேன்.
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து யானும்
தூய பணி புரிந்திடவுன் சுடரைத் தூவேன்

▲▲▲▲

காலமெலாம் காசினிக்கு ஏற்றதாக
கனிவோடு பணி புரியக் கருணை செய்வாய்
சீல மோடு வாழ்ந்திங்கு தேவை மட்டும்
திருத்தமுடன் ஈனி புரிய அருளைத் தாவேன்!

▲▲▲▲

பொங்கி வரும் கல்விக்கு நிகரா யிந்தப்
பூதலத்தில் ஒரு செல்வம் வேறேதுண்டு.
தங்க நிகர் கல்வித் தாய் அருளவேண்டும்!
தரணியிலே தலை நிமிர்ந்து வாழவேண்டும்.

நன்றி: மினா
(அனுராதபுர இளைஞர் வட்டவெளியீடு.)

# 25. அண்ணலை நினைத்து வாழ்வோம்!

சிலைகளை வணங்கி மாந்தர் - அன்று
சீரழிவுற்றார் என்றோ
மலையொளிர் நிலவாய் எங்கள் - தூய
மா நபி வந்தார் மண்ணில்!

அறிவினை மறந்தே அன்று - பெண்ணை
அழித்தனர் சிசுவில் கொன்று!
நெறியுயர் தீனைக் கொண்டே - நபி
நிலத்தினை வளர்த்தார் நன்றே!

இஸ்லாம் என்னும் தூய - இறை
நிதியினை மண்ணுக் கீந்து
ஜாஹிலியர் செய்தீமை - கொடும்
அனலினை அணைத்தார் தாமே!

தொல்லைகள் கடலின் மேலாய் - இங்கு
துலங்கியே நின்ற காலை
எல்லையில்லாத இன்ப - உயர்
இஸ்லாம் தனை விதைத்தார்!

மண்ணிலே இஸ்லா மென்னும் - எங்கள்
மாமறை வளர்த்த செம்மல்
அண்ணலார் நபியை நாமும் - இங்கு
அனுதினம் நினைத்து வாழ்வோம்!

-நன்றி : தினகரன் மீலாத்சிறப்பு மலர்.

குறிப்பு: ஜாஹிலியர் எனும் அரபுப்பதம் அறிவில்லாதவர்கள் என்பதைக் குறிக்கும்.

# 26. குளிர்ந்த மலைகள் சிவப்பேறும்!

முத்து, கருப்பன், மூக்காயி - எங்கள்
முனியன், வேலு, முருகாண்டி!
கொத்திப் பிளந்தனர் மலையினையே
கூடை சுமந்தனர் முதுகினிலே!

எறும்பு போலச் சோம்பாது - நிதம்
எந்திரம் போல உழைத்தனராம்
கரும்பு, கதலி, கனி மரங்கள் - நல்ல
காய்கறி யாவும் விதைத்தனராம் .

ஆணும் பெண்ணும் சமமாக - அங்கு
ஐக்கியமாக உழைத்தனராம்
பாணும், பருப்பும் பசிக்குண்ண - அவர்
பறந்து உழைத்து மெலிந்தனராம்

கொட்டும் மழையும் குளிரும் பனியும் - நன்கு
கொளுத்தும் கொடிய வெய்யிலினிலும்;
அட்டைகளிரத்தம் குடிக்கையிலும் - அவர்
அனுதின மோயா துழைத்தனராம்.

ஓட்டை "லயத்தில்;" உறங்கிடினும் - நிதம்
ஓயா துழைப்பில் இறங்கினராம்
காட்டை அழித்துக் கழனிகளாய் - அவர்
கடிய உழைப்பால் மாற்றினராம்!

☛ ☛ ☛ ☛

உதிரம் தன்னைத் தேயிலைக்கே-
நல்லஉரமாய் இட்டு வளர்த்தனராம்!
மதுரமான தேனீரும் - அந்த
மாண்பினைக் கூறிச் சிவந்ததுவாம்!

☛ ☛ ☛ ☛

மாடாய் உழைத்து ஓடாகி - அந்த
மன்னர்க் கெல்லாம் தோய்ந்தனராம்
கேடாய் உழைப்பைத் திருடியவர்- நன்கு
கீர்த்தி பெற்று உயர்ந்தனராம்.

☛ ☛ ☛ ☛

இந்த-
கொடுமை நெருப்பைத் தாங்காது!- அந்த
குளிர்ந்த மலைகள் சிவப்பேறி!-
திடமாய் வெடித்துத் தான் சிதறும் - ஈனத்
திருடர் வாழ்வை குடித்து வைக்கும்!

-நன்றி கண்டி குன்றின்குரல்.

## 27. நாங்கள்

கூரையிலே ஆயிரங்கண் கொளுத்தும் வெய்யில்
குடியிருக்கும் உள் வீட்டில் மாரி காலம்
வாடையிலே உடலுறைந்து போகும்! எங்கள்
வாழ்க்கையெல்லாம் துன்பமாய் மாறிப் போகும்.

✡ ✡ ✡ ✡

பாயில்லை படுப்பதற்கு எழுந்து நாங்கள்
பசியாற உண்பதற்கு உணவு மில்லை
நோயில்லா வாழ்வெமக்கு அமைய வில்லை
நொடிப் பொழுதும் எமையின்பம் தழுவ வில்லை.

✡ ✡ ✡ ✡

கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கடும் போராட்டம்.
கருணையிலா சமூகத்தில் நாமோர் கூட்டம்.
ஏழ்மை நிலை தானெமக்குத் தோழ ராகும்
இம்மையிலே நமது இடம் நரகமாகும்.

✡ ✡ ✡ ✡

பசிவரவே மாத்திரைகள் உண்போர் வாழும்
பாரினிலே வாழுகிறோம் தனவந்தர்கள்
வசிக்கின்ற வீட்டினிலே நாய் களுண்ணும்.
வகையான உணவுகளும் எமக்கு இல்லை.

✡ ✡ ✡ ✡

பெற்றெடுத்த செல்வரினைக் கல்வி என்னும்
பெருங் கடலில் நீந்த வைத்துக்கரையில் சேர்க்க
பற்றெமக்கு மிகவுண்டு பணத் துடுப்பு
பகையாகிப் போனதனால் வீணில் வாழ்ந்தோம்!

✡ ✡ ✡ ✡

இத்தரையில் எமைப்போன்ற மாந்தர் தம்மை
ஏன் படைத்தான் இறைவனும் உயிரைத் தந்து
நித்தமுமே துயரத்தில் ஆழ்த்தி விட்டு
நித்திரையா செய்கிறான் நம்மைவிட்டு...!

✡ ✡ ✡ ✡

நித்திரையோ செய்யவில்லை நிமலன் விட்டு
நெறியில்லா மாந்தர்கள் புரியும் சதியால்
இத்தரையில் கிடந்து நாம் உழலல் எல்லாம்
இனியுந் தான் மாறிடவே வழிகள் காண்போம்.

✡ ✡ ✡ ✡

-நன்றி: அக்குறணை மலைக் கொழுந்து.

## 28. எழுவோம் இளைஞர்காள்!

சோம்பலைக் கொல்வோம்! நல்ல
சுறு சுறுப்பதனைக் கொள்வோம்
வீம்புகள் பேசிப் பொழுதை
விரயமே பண்ணல் விட்டு
நாம் தொழில் செய்வோம் இந்த
நாட்டையே உயர்த்தி வெல்வோம்!

❋❋❋❋

பாழ்நிலை மாற்றி யிங்கோர்
பசுமையே பூக்கவைப்போம்
ஊழ்வினைப் பயனே என்று!
ஒடுங்கிய நிலையைக் கீழே
வீழ்த்தியே வெல்வோம் வாழ்வில்
வெற்றியே சொந்தம் கொள்வோம்

❋❋❋❋

சடைமுடி வளர்ப்பதாலே
தரித்திரம் தீர மாட்டா
உடைகளை மேல் நாட்டார் போல
உடுப்பதால் பயானொன்றில்லை!
மிடிமைகள் தீர வேண்டில்
வீரமாய் உழைத்தல் வேண்டும்!

❋❋❋❋

இளைஞரின் வடிவமன்றோ
இவ்வுலகத்தின் சக்தி...?
களைப்பினை விட்டு வீசி,
கனிவுடன் உழைப்பை எண்ணி
இளைஞர்காள்! எழுவோம் நாளை (ய)
இனிமையை இன்றே காண்போம்!

-நன்றி தினகரன்: வாரமலர்.

# 29. நல்லோர்க்கே சொர்க்கம்!

வாழ்க்கை என்பது சிறிதாகும்! - அதில்
வாழும் முறையோ பெரிதாகும்
ஏழைக் கிரங்கி வாழ்வதுவே இனிய
இஸ்லாம் தந்த நெறியாகும்!

✣ ✣ ✣ ✣

குடிசை வாழும் ஏழைகளும் - பெருங்
கோடி சீமான் "ஹாஜி"களும்
முடிவில் சமமாய் மண் மீது - நபி
மொழிந்தவாறு "ஜனாஸா"வே!

✣ ✣ ✣ ✣

போட்டி பொறாமை புகு நெஞ்சம் - பெரும்
பொல்லாப் பழிகள் உறை மஞ்சம்
ஆட்டிப் படைக்கும் "சைத்தான்கள்" - உடன்
அகற்றி வாழல் அறமாகும்.

✣ ✣ ✣ ✣

பெண்ணே வாழ்வின் கண்ணாகும் - அவள்
பெருமையின் அளவோ! விண்ணாகும்.
இன்னல் தன்னை அவர்க் கூட்டல் - உயர்
இஸ்லாத்திற்கே முரணாகும்!

✣ ✣ ✣ ✣

ஏழைப் பெண்ணைக் கரம்பிடிப்போன் - தூய
இறையோன் கருணைதனைப் பெறுவான்!
நாளும் பொழுதும் அன்புடனே வாழும்
நல்லோர்க் கென்றும் சுவர்க்கம் மெய்!

-நன்றி: இலங்கை வானொலி
(மாதர் மஜ்லிஸ்)

## 30. மானிடப் பிறவி.

மகிமை மிக்கதோர் மானுடப் பிறவி
அணுவிலும் நுண்ணிய கருவினில் இருந்து
அன்னை வயிற்றினுள் அடக்கமாய் வளர்ந்து
பத்துத் திங்களில் பாரிலே பிறப்பான்!

✦ ✦ ✦ ✦

இருண்ட சூழலை மாற்றிய பின்னே
ஒளி உலகத்தை உவப்புடன் பார்க்க
விழிகள் திறப்பான் விருப்புடன் கை கால்
ஆட்டி மகிழ்ந்து அகிலத்தை ரசிப்பான்!

✦ ✦ ✦ ✦

தத்தித் திரிந்து தளர்நடை பயின்று
பள்ளிப் பருவ வாசல் ஏறி
இளைஞனாகி என்றும் வனப்புடன்
உலக அரங்கில் நடிப்பினைத் தொடர்வான்!

✦ ✦ ✦ ✦

குருடனாய், செவிடனாய் குடிக்கு அடிமையாய்
அறிஞனாய்க் கலைஞனாய் ஆயிரம் வேஷம்
ஏதோ ஒன்றை இட்டுக் கொள்வான்.
எல்லாம் மனம் போல் இகத்தில் செய்வான்!

✦ ✦ ✦ ✦

முதுமை தோன்றுமே நரைகள் தாவுமே,
பிள்ளையைப் பெற்றவன் பேரனைக் காண்பான்
போகப் போக நடை தளர்ந்திடுவான்.
பூமியில் ஒரு நாள் உறுதியாய் இறப்பான்!

# 31. நயமடைவார்.

ஒவ்வொரு மனிதனும் தன் மனப் போக்கின்
படி, செய லாற்றுகிறான் - ஆம்!
இவ்வுல காளும் இறைவனோ நாம் செலும்
பாதையை மாற்றுகிறான்.

* * * *

மனத்தின் இச்சைக்கு மதிப்பு கொடுத்து
நடப்பவன் வழி கெடுவான்! - எக்
கணத்திலும் மனத்தை கட்டுப் படுத்தி
வாழ்பவன் மகிழ்ந்திடுவான்!

* * * *

முரணான வழியில் இன்பங் காண
முனைகிற மனத்தாலே - மனிதன்
பரமனின் கோபப் பார்வையிற் படுவான்.
தன் சிறு குணத்தாலே!

* * * *

மனமோ ஆன்மாவுக்குள் ளிருக்கும்
சுதந்திரம் பொருளாகும் - அதைத்
தினமுஞ் சரிவரப் பேணிடா விட்டால்
துருப்பிடித் திருளாகும்!

* * * *

மனத்தைக் கட்டுப் படுத்தும் பலத்தை
உடையோர் ஜெயமுடையார் - நல்ல
குணத்தை கொள்கையை கொண்டவர் இருமை
உலகிலும் நயமடைவார்.

நன்றி: சிந்தாமணி

## 32. துணிவு வேண்டும்!

முயற்சியே எங்கள் பாதை
மகிழ்ச்சியே தேடும் இல்லம்
உயர்ச்சியே அடையும் ஊராம்
உணர்ச்சியே பயணத் தேராம்.
அயர்ச்சியை எதிரிப் படையாய்
அழித்து நல் இன்பம் காண்போம்.
வியர்வையை வீர வாளாய்
வீசியே உழைத்து வெல்வோம்!

✹ ✹ ✹ ✹

கெட்டதாம் முயற்சி காணாக்
கடமையில் தூய்மை சேரின்
திட்டமாம் கொள்கை நன்றாய்
தீட்டிடும் வெற்றி பாரீர்!
தொட்டவை பொன்னாய் மாறத்
துணிவு தான் வேண்டும்! இங்கே
விட்டது அகலும் வினைகள்
வாழ்வது பூக்கும் சிறந்து!

✹ ✹ ✹ ✹

அடுப்பெல்லாம் எரிந்து பசியை
அழித்திடும் உறுதி வேண்டும்!
துடுப்புகள் இளைஞர் நாமே
திருப்பணி தொடங்கி வாழ்வின
வடுக்களை களைத்து எங்கும்
வெளிச்சத்தை விதைக்க வேண்டும்
கொடுந்துயர் நீங்கி யார்க்கும்
களிப்புறும் விடியல் வேண்டும்!

மழைதரும் மேகம் பார்ப்பீர்!
மண்வளச் சிறப்பை பார்ப்பீர்!
பிழை தராக் கல்வி நெறிகள்
படிகளாய் உயர்வு காட்டும்!
இளைஞரே எழுவீர் எங்கள்
இலட்சிய நோக்கம் உழைப்பு
அழைக்கிறேன் வாரீர் உயர்ந்து
ஆக்குவோம் நிம்மதி வெளிச்சம்!

✸ ✸ ✸ ✸

கரையினில் ஆலைத் தொழில்கள்
நிறமொடு கண்டோம், இன்னும்
கரையிலாக் கடலில் புகுந்து
கொள்ளுவோம் செல்வத் தொழில்கள்.
விரைவுறச் செய்வோம் அறிவால்
விண்ணிலும் அடைவோம் வெற்றி
நிரையெனத் திரள்வீர்! கணமும்
நன்மைகள் படைப்போம் நெஞ்சே!

✸ ✸ ✸ ✸

-நன்றி: தினகரன் வாரமலர்.
இலங்கை வானொலி கவிதைச்சரம்.

## 33. மனமாற்றம் வேண்டும!

எழுத்தாளர் என்கின்றார்! எழுதுவோருள்
இவர் தானாம் மாமன்னர்! செப்புகின்றார்!
“பழுத்தபழம்”போற் பேசும் இவரோயிங்கு
படைத்தவையின் பட்டியலோ பூஜ்ஜியம்தான்.
அழுத்தமுடன் எதைச் சொன்னார் புதுமையாக..?
அசலுண்மை! கடல் நீரா உப்பு என்றார்.
வெளுத்த நிறம் பாலென்றார்! வானில்நீந்தும்
வெண்ணிலாவின் ஒளி தண்மை என்றுசொல்வார்.

✓ ✓ ✓ ✓

“நா” மெத்தத் தடித்ததனால் “நான்” நானென்று
நலங்கெட்டவார்த்தைகளை கொட்டுகின்றார்
“பா” மெத்தப்படைத்தளித்த பாவாணர் போல்
பல மேடைகண்டவர் போல் பகருகின்றார்.
காமத்தைக் கருவாக கொண்டு ஏதோ
கண்டபடி நாலைந்தைக் கிறுக்கியுள்ளார்
நாமத்தை அச்சினிலே! “பெரிதாய்ப்” போட
நாய் படாப்பாடு பல படுகின்றாரே!

✓ ✓ ✓ ✓

பெண்ணழகை கவி செய்வார்! பெண்களே இப்
பெருவுலகில் பேறென்றும் சாற்றி நிற்பார்.
பெண்ணொருத்தி எழுத்துலகில் முன்னே நிற்கப்
பித்தரிவர் “பெருமனது” இடங் கொடாது!
வண்டமிழைக் கொண்டு இவர்வசைகள் பாடி
வருத்தமுறச் செய்திடுவார் வார்த்தையாலே.
மண்டைதனில் கனம் கொண்டார்!அறிவைத்தீட்டி
மனமாற்றம் பெற்றுய்ய வேண்டுகின்றேன்.

-நன்றி: சிந்தாமணி.-

## 34. ஒற்றுமையாய் வாழ்வோம்!

பாரிலே ஏராளம் பிரச்சினைகள்
பார்த்து விடும் போதினிலே எந்தனுக்குள்
தீராத கவலைகளோ விண்ணை முட்டும்
சித்தம் மிகக் கலங்கி மிக்க துயரம் நீளும்!

O O O O

சாதி மத பேதங்கள் தலையைத் தூக்கி
சாக்கடைக்கும் கீழாகச் சமூகந் தன்னை
சதியாலே நின்று மிங்கு எதிரி யாக்கி
நெஞ்சத்தில் கடுந்து யரை நிறையச் செய்யும்!

O O O O

ஆதலினால் சோதரர்காள் அகிலந்தன்னில்
அனைவருமே ஒற்றுமையாய் வாழ்ந்து விட்டால்
பூ தலத்தில் ஏது துயர் எண்ணிடுங்கள்
புண்ணியங்கள் சேர்வதற்கு உழைத்திடுங்கள்.

-நன்றி: சிந்தாமணி.-

## 35. உழைப்பிற்கு ஊதியம் தா !

கூடையிலே கொழுந் தெடுத்தும்
கூழுக்கே அடி பிடிகள்.
கோடையிலும் குளிரினிலும்
கூடுதலாய் எம் நேரம்
வாடி விடும், ஆனாலும்
வயிற்றுக்கு வழியில்லை!

✱✱✱✱

உழைப்பதற்கு ஊதியத்தை
ஒழுங்கின்றித் தருபவரும்
பிழைப்பிற்கு வழியற்றுப்
பெரும் பாவம் புரிபவரும்
சளைக்காமல் வாழுகின்ற
சந்தோஷ நேர முண்டு!

✱✱✱✱

நாளை வரும் என்று மனம்
நம்பிக்கை கொண்ட தெலாம்
பழாகிப் போன தந்தோ
படித்திட்ட மாந்த ரெலாம்
ஏழைகளை எந் நாளும்
எரிச்சலுடன் நோக்குகிறார்!

✱✱✱✱

நாட்டிற்கு முது கெலும்பு
நாமென்று வார்த்தைகளால்
பாட்டிசைத்து வாழுகின்ற
பாவிகளே, எங்களது
வீட்டிற்குப் பணம் தேவை
வியர்வைக்குப் பணம் கொடுங்கள்!

நன்றி :தினகரன் மலையகமஞ்சரி.

## 36. தென்றல். (உருகக்கவிதை)

காற்றுகள் பல வந்தும்
கலங்கிடாமல் நிற்கின்ற
ஆற்றலுள் ளோன் நா னென்று
அகங்காரம் கொண்ட ஒரு
வாட்டமுள்ள ஆல மரம்
வாழை யொன்றை நோக்கியது!

✣ ✣ ✣ ✣

சிறியவனே நீ இந்தச்
செகத்தினிலே வாழ்ந்துவிடும்.
அருகதையோ சில காலம்
அறிவாயோ என்று ரைத்துப்
பெருஞ் சத்தம் போட்டு தன்
பேரிரைச்சலைக் காட்டியது

✣ ✣ ✣ ✣

வாழை மரமோ வாய் திறவா (து)
வருத்தமுடன் நிற்கையிலே
காலையிலே வீசிய புயற்
காற்றதனால் எதிர் நின்ற
அவ்வால மரம் விழுஞ் சப்தம்
அவ்வாழைக் கொலித்ததுவாம்!

-நன்றி: மலைத்தீபம்
(மடவளை மதீனாவெளியீடு.)

## 37. துணைவன் வேண்டும்!

சீதனம் எதுவு மில்லை:
சீர்மைக்குப் பஞ்ச மில்லை
ஆதனம் அதுவும் மில்லை
அழகினில் குறைச் சலில்லை!
பேதையென் வாழ்வில் ஒன்றாய்
பிணைந்திட வரனும் இல்லை!

❋ ❋ ❋ ❋

கல்வியும் கற்றேன் - நல்ல
கனிவினை உளத்தில் பெற்றேன்
சொல்லினில் தெளிவு கொண்டேன்
சுயநலம் துளியும் இல்லை!
நல்லதோர் துணைவன் என்னை
நாடியே வரவும் இல்லை!

❋ ❋ ❋ ❋

குடிசை தான் வாழ்க்கை - ஆனால்
கோபுரம் என்றன் உள்ளம்
நடிகையாய் வாழ்வில் மாறும்
நரித்தனம் எதுவும் இல்லை!
அடிமையாய் என்னை அன்பால்
ஆண்டிட ஆளன் வேண்டும்.

❋ ❋ ❋ ❋

அன்னிய நாட்டுக் கென்னை!
அனுப்பியே உழைக்கத் தூண்டி
தின்றிடத் துடிக்கும் பேயர்
தேவையே இல்லை - ஆண்மை!
தன்னகம் கொண்டு வாழும்
தகைமை சேர் துணைவன் வேண்டும்!

-நன்றி: தினகரன் இதயகோலங்கள்.

## 38. விடிவு என்று...?

ஏழைக்கு இல்லை இன்பம்
இருப்பது யாவுந் துன்பம்
கூழையே கண்டால் இன்பம்!
கொடுமைதான் வறுமைத் துன்பம்
நாளையோர் விடிவை எண்ணி
நலமுடன் வாழ எண்ணும்
வாழை போல் மடியு மிந்த
மாந்தருக் கென்று இன்பம் ?

⊠ ⊠ ⊠ ⊠

மாடென உழைத்தே ஈற்றில்
மனத்துயர் மட்டும் மிஞ்சும்!
பாடுகள் பட்டே பின்னால்
பலனது பூஜ்ஜியம் தான்
மாடியை நிமிர்ந்து நோக்கும்
மனிதர்கள் இவர் களாலே
மாடிகள் தன்னில் வாழ்வோர்
வதிகிறார் பணத்துக்குள்ளே!

⊠ ⊠ ⊠ ⊠

குளுகுளுப் பான இல்லம்
குடித்திட "உயர்ரகங்கள்"
வழு வழுப்பான காரில்
வாழுவர், அவர்க்குச் சொர்க்கம்
அழுகையே காணும் ஏழை
அன்னவர்க் கிது நரகம்!
பழுவான வாழ்கைப் பேறு
பார்த்திட வருவார் யாரு...?

-நன்றி: இலங்கை வானொலி
(இளைஞர் மன்றம்.)

# 39. தவமழை புனித குர்ஆன்!

அறியாமை இருளில் மூழ்கி
அகிலத்து மக்க ளெல்லாம்,
இறையோனை மறந்து பொல்லா
ஈனராய் வாழ்தல் கண்டு
நெறியோராய் அவரை மாற்றி
நிம்மதி வாழ்வில் காண
இறையோனின் தூதர் மூலம்
இறங்கிய புனித குர் ஆன்!

★★★★

கல்லையே கடவு ளென்று
கண்ணிலா வழி நடந்து
இல்லையோர் தெய்வ மென்று
இதயத்தில் மடமை கொண்டு
புல்லையே பூக்க ளென்று
புனிதத்தை மறந்து நின்றோர்
அல்லலை அகற்ற அல்லாஹ்
அருளிய புனித குர்ஆன்!

★★★★

மங்கையர் தம்மை மண்ணில்
மதித்திடா வண்ணம் மூடர்
எங்கணும் கொடுமை செய்யும்
இழி நிலை தன்னை மாற்றிப்
பொங்கிடு மொளியை இந்தப்
பூவுல கெங்கும் ஏற்றி
தங்கமாய் இறைவன் தந்த!
தவமழை புனித குர்ஆன்

நன்றி: இலங்கை வானொலி
(மாதர் மஜ்லிஸ்)

## 40. மறப்பது எங்ஙனஞ் சேடி...?

கொள்ளை யடித்தன னெந்தன கத்தினைக்
குடிய மர்ந்தனன் பின்னே - அன்புத்
தொல்லை கொடுத்தனன் தோகை யெனக்குள்ளே
தொடர்ந்து உதித்தனன் கள்வன்!
வெள்ளை யுளத்தினில் தாமரை போலவன்
விரிந்து கிடந்தனன் நித்தம்!
எல்லையிலாதொரு இன்ப உணர்ச்சியில்
என்னை மயக்கினன் சேடி

❑❑❑❑

நந்த வனத்தினி லன்றொரு நாழிகை
நாயகனென் கரம் பற்றி
சிந்தை குளிர்ந்திடச் சேர்த்து அணைத்தின்பச்
சேதிகள் செப்பினன் சேடி!
எந்த னெழில் உடல்வந்து தழுவிட
தென்ற லிடத்தினைத் தேடும்
அந்த நற் பொழுதினை யானும் மறந்திடல்
ஆகுவ தெங்ஙனஞ் சேடி?

❑❑❑❑

ஆண்மைக்கவன் நல் இலக்கணமாகுவன்
ஆமிது மெய்யடி சேடி!
வீண் புகழ்ச்சியை வெறுத்து ஒதுக்குவன்
வீரனென் காதலன் சேடி!
வான் தரும் மழை போலவன் அன்பு
வரவு நிகழ்ந்திடுஞ் சேடி!
மான் விழிக்கவன் மகிழ்வினை யூட்டினன்
மறப்பது எங்ஙனஞ் சேடி?

நன்றி: தினகரன் இதயகோலங்கள்.

கலைமகள்



ஹிதாயா ரிஸ்வி.

# கலைமகளும் கவிதையும்...

80 களுக்குப் பின் எழுந்த மரபுக்கவிதையாளர்களின் பட்டியல் விசாலமானது. எனினும் குறிப்பிட்டுச்சொல்லக் கூடிய ஒரு சிலரே (பெண்கவிஞர்களில்) இத்துறையில் நம்பிக்கை ஏற்படுத்திச் செயல்படுகின்றனர்.அந்த வரிசையில் ஒருவர் தான் இந்த ஹிதாயா றிஸ்வி.

இலங்கையின் சகல தினசரிகளிலும, வார ஏடுகளிலும், சிற்றேடுகளிலும, மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரை என்று தவறாமல் எழுதிவரும் இவர் படைப்புக்கள் சில இந்திய "சமரசம்" வெளியீட்டிலும் வெளியாகியுள்ளன. தரமான இவரது கவிதைகள் சில அரபு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான இலக்கியவிழாக்களில் கலந்து கொண்டு. சொற்பொழிவும், கவிதாமழையும் பொழியும் இவர் பல இலக்கியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களைத் தனதாக்கிக்-கொண்டுள்ளதோடு. 1988ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அகில இலங்கை கவிதைப்போட்டியில் ஜனாதிபதி பரிசினையும் தட்டிக்கொண்டார்.

பல்வேறு சமூகசேவை, இலக்கிய மன்றங்களில் அங்கத்துவம் வகிப்பதோடு மலேசியாவிலுள்ள உலகத்தமிழ்கவிஞர் பேரவையிலும் முக்கிய இடத்தினையும் வகிக்கின்றார். இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளிலும் குரல்கொடுத்துள்ள இவர் ரூபவாஹினிக் கவியரங்களிலும் முதன்முதலில் பங்கு கொண்ட முஸ்லிம்பெண் என்ற பெருமையைத்தட்டிக் கொண்டவர். இலங்கைவானொலி மாதர் மஜ்லிஸ்பிரதி தயாரிப்பாளர்களில் ஒருவர். கல் எலிய முஸ்லிம் பெண்கள் அரபிக்கல்லூரியின் பழையமாணவியான இவர் ஒரு மௌலவியாவும் ஆவார். ஹிதாயத்துல்விதான் குர்ஆன் மத்ரஸாவின் அமைப்பாளருமாவார். தடாகம் சஞ்சிகையின் ஆசிரியையான ஹிதாயா தொலைக்கல்வி நிறுவத்தின் பொதுசனத்துறை டிப்ளோமா பட்டம்பெற்றுள்ளார். தற்போது. இலங்கை வானொலி இளைஞர்மன்ற பிரதித்தயாரிப்பிலும் பங்குபற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-நிஸா-

குறிப்புகள்.

# தேன் மலர்கள்



கலைமகள் ஹிதாயா ரிஸ்வி

சிந்தனை வட்டம்